1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது
Tele{grams: "CATHOLIC PRESS", JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

80-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1955-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 37-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

சென்ற ஞாயிற்றுக்கிழமைமுதல் இரண்டொருமுறை சிறுகமழைபெய்திருக்கிறது. மழைக்கோலம் அதிகமாகக் காணப்படுகிறது. காற்று உக்கிரமாக வீசிக்கொண்டே வருகிறது.

### ரோமாபுரிசெல்லும் குருத்துவமாணவர்

உயர்ந்த வேதசாஸ்திரங்கள்கற்றுப் பட்டங்கள் பெற்றுவருமாறு யாழ்ப்பாணமேற்றிராசனத்தைச் சேர்ந்த வண. பி. அந்தோனிப்பிள்ளை, வண. எல். பொன்னையா, வண. ஏ. சேவியர் குருஸ் எனும் பிறதர்மார்மூவரும் நாளை நின்றுவரும் சனிக்கிழமை கொழும்பிலே கப்பலேறி ரோமாபுரிக்குப் பயணமாகவிருக்கின்றார்கள்,

### மன்னார் அரசாங்கஏசன்றர்

மன்னார் அரசாங்கஏசன்றாய் இருந்துவருகிறவரான திரு. எஸ். சிவநாதன் அவர்கள் இம்மாதம் 26-ந்திகதிமுதல் அம்பாந்தோட்டை அரசாங்க ஏசன்றாக மாற்றப்பட்டிருக்கின்றார். இவரிடமாகக் குருநாகல் அரசாங்க ஏசன்றரான திரு. எஸ். பத்திரான அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கிறார்.

### களவிலே குடியேறியவர்கள்

தென்னிந்தியாவிலிருந்து களவிலே குடியேறவந்து கரையில்இறங்கமுயன்ற 82பேரை இருவள்ளங்களுடன் இலங்கைக் கடற்படையினர் கோவளக்கரையிலே சென்றவியாழக்கிழமை கைப்பற்றினர். இவர்களிலே பெண்கள் ஐவர். அதற்கு முந்தியதினம் அதேயிடத்தில் தானே 25 கள்ளக் குடியேற்றகாரர் கைதுசெய்யப்பட்டனர். இவர்களெல்லாம் ஊர்காவற்றுறைப் பொலிசரிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். களவிலே வந்து குடியேறிய மற்றும் 11பேரை பொலிஸ்சார்ஜன் பி. ஞானப்பிரகாசம் அவர்கள் சென்றசனிக்கிழமை இராவிலே யாழ்ப்பாணத்துக்கும், பளைக்குமிடையிலும், பிந்தச் சுன்னாகத்திலும் கைதுசெய்பலாயினர்.

### நாள்ஒன்றுக்கு மரணம் ஒன்று

இலங்கையின் விபத்துவிகிதம் அதிகம்; இன்னும்படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வருகிறதென்று பொலிஸ் இன்ஸ்பெக்றர் – ஜெனறல் 1954-ம் ஆண்டுக்கான தமதுநிர்வாக அறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். சென்றவருடம் இலங்கை வீதிகளில் 14,172 தெருவிபத்துகள் நடந்தனவென்றும், அவற்றுலே 7,600 பேர் கடினகாயம் அடைந்தனரென்றும், 300 பேர் இறந்துபோயினரென்றும் அவர்தெரிவித்திருக்கின்றார். அதாவது நாள்ஒன்றுக்குச் சராசரிவீதமாக 40 விபத்துகளும், ஓர்மரணமும் நிகழ்ந்திருக்கின்றன. காயமடைந்த ஒவ்வொரு 40 பேரிலும் 21 பேர்படுகாயம் அடைந்திருக்கின்றார்கள்.

### பறிமுதலான அபின்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கனகப்பிள்ளை சீனியம்மாவின் வீட்டைச் சென்ற 16-ந்திகதியன்று துறைமுக அதிகாரிகளால்பரிசோதனை செய்ததன் விளைவாக இருபதினாயிரம் ரூபா பெறுமதியான அபின்கண்டுபிடித்துப் பறிமுதலாக்கப்பட்டதுடன் ஓர் பெண்ணுக்கு ஆயிரம்ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

### பனாட்டு ஏற்றுமதி

கொடிகாமத்தைச்சேர்ந்த வரணிப் பகுதியிலே இடைக்குறிச்சிஎனும் கிராமத்திலுள்ள பனம்பொருள் உற்பத்திச்சங்கமானது மத்தியவங்கியிலிருந்து 2,000 ரூபா முற்பணமாகப் பெற்று அங்குள்ளபனாட்டைத் திருப்திகரமானமுறையில் நிறுத்துவாங்கியது. தற்போது சுமார் 3,000 ரூபா பெறுமதியானபனாட்டு அங்கிருந்து மட்டக்களப்புக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### கொழும்புநகர மேயர்

தற்போது கொழும்புநகர்மேயராய் இருந்துவருகிறவரும், லங்காசமசமாஜ கட்சியின் தலைவருமான டக்றர் என். எம். பெரேரா அவர்களை மேயர்பதவியிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கொழும்பு நகரசபையிலுள்ள வலதுசாரிக்கோஷ்டி அங்கத்தவர்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றார்கள். இந்தத்தீர்மானம் சென்றவெள்ளிக்கிழமை ஐக்கியதேசீயக்கட்சியின் பொதுக்காரியதரிசியான சேர் உக்வத்தை ஜயசுந்தரா அவர்கள் தலைமையிலே நடைபெற்ற வலதுசாரிகள்கூட்டத்தில் நிறைவேறலாயிற்று. கட்சியின் நலன்களை உத்தேசித்தே டக்றர் என். எம். பெரேரா அவர்களை மேயர்பதவியிலிருந்து நீக்கவேண்டுமென்ற யோசனையை ஆதரித்துக் கூட்டத்திலே சமுகமாயிருந்த 15அங்கத்தவர்களும் கைகளை உயர்த்திச் சம்மதந்தெரிவித்தார்கள்.

### தீவுப்பகுதிப் போக்குவரத்து

யாழ்ப்பாணத்திலே தீவுப்பகுதிமக்களுக்குப் பிரயாணசேவை நடத்திவரும் மோட்டர் வள்ள ஐக்கியசங்கம் தற்போது நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு, ஊர்காவற்றுறை, நெடுந்தீவுஆதியாம் இடங்களுக்கிடையே தனது மோட்டர்வள்ளங்கள்கொண்டுபோக்குவரத்துச்சேவை செய்துவருகின்றது. நெடுந்தீவுப் பிரயாணசேவையையும் தற்போதுஅரசினர் இச்சங்கத்தினிடமே கையளித்துள்ளனர். அப்பகுதிகளின் தபாற்சேவையையும் சங்கவள்ளங்களே நடத்திவருகின்றன. அரசினரால் நெடுந்தீவுப் பிரயாணசேவைக்கென்று விடப்பட்ட "சில்வர் ஸ்பிறே", "இராசேஸ்வரி" என்ற மோட்டர்வள்ளங்களும் தற்போது சங்கப்பொறுப்பிலேயே ஓடுகின்றன. புங்குடுதீவு – நயினாதீவுப் போக்குவரத்துச் சேவையையும் நடத்தச் சங்கம்ஒழுங்குசெய்து வருகின்றது. சங்கம் இலாபகரமாகப் பணியாற்றிவருவதால் இன்னும் ஓர்புதிய பெரிய மோட்டர்வள்ளத்தை வாங்கத் தீர்மானித்திருக்கிறது. இன்னும் சங்கத்தின்பணிநிலை இப்பொழுது திருப்திகரமாய் இருப்பதாலே அது அங்கத்தவர்களுக்கு இலவசப்பிரயாண சீட்டுகளும் [illegible]

### ஏக்கருக்கு 101 புசல்நெல்

தம்பலகாமம்வடக்குக்கிராமவிதானையாரான திரு. ஐ. கந்தையா அவர்கள் தம்பலகாமம் கோவிலாற்றுப்பாய்ச்சலிலுள்ள ஐந்துரூட்டுப்பகுதி எனும்வயலை இவ்வருடம்பின் மாரிவேளாண்மைச் செய்கையிலே ஜப்பானியமுறைப்படி நவீனமாதிரியாக நாற்றுநட்டு நெல்வேளாண்மை செய்தார். அதன்விளைவாக ஏக்கர்ஒன்றுக்கு 101 புசல்நெல் வீதம் விளைந்திருப்பதாகத் தெரியவருகிறது.

### பரந்தன் நீதிஸ்தலம்

கரைச்சிப்பகுதி மக்கள் செய்துகொண்ட மனுவின்பேரிலே வருகிற ஐப்பசிமாதமுதல் பரந்தனில் ஓர்நீதிஸ்தலம் திறக்கப்படவிருக்கிறது. அங்குள்ள பழையகமஅதிகாரியின் காரியாலயத்திலே இந்தநீதிஸ்தலம் திறக்கப்பட்டு மாதம்இருமுறை விசாரணை நடத்தும். சாவகச்சேரி நீதவானாகிய திரு. வி. எம். குமாரசாமி அவர்கள்சென்று விசாரணை நடத்திவருவார். தற்போது கரைச்சிப்பகுதியிலுள்ள மக்கள் வழக்குகள்சம்பந்தமாய் 40, 50 மைல்தூரத்துக்கு அப்பாலிருந்து சாவகச்சேரிக்கு வரவேண்டியிருக்கிறது.

### தீவுப்பகுதியிலிருந்து குடியேற்றம்

இரணைமடு வலக்கரை இரண்டாவது குடியேற்றத் திட்டத்தின்கீழ் அங்கு குடியேறுதற்கென்று தீவுப்பகுதியிலிருந்து நானூற்றுக்குமேற்பட்ட விண்ணப்பங்கள் வடமாகாணஏசன்றருக்கு அனுப்பப்பட்டிருந்தன. முதலாவது பரிசோதனையின்முடிபாய் இவற்றிலே இருநூறுவிண்ணப்பங்கள்தெரிந்தெடுக்கப்பட்டன. பின்னர் இம்மாதம் 9-ந்திகதியன்று தீவுப்பகுதிக் காரியாதிகாரியின் காரியாலயத்தில் நடந்தேறிய காணிக்கச்சேரியில் இருநூறுவிண்ணப்பங்களும் திரும்பவும் பரிசோதனைசெய்யப்பெற்று 82 பேருக்குக் குடியேற உத்தரவு அருளப்படலாயிற்று.

### சேவையிலிருந்துவிலகும் டக்றர்மார்

அரசாங்கசேவையில் அடைந்துகொண்டுவரும் அதிருப்திகாரணமாக அரசாங்க சுகாதாரசேவைப் பகுதியிலிருந்து மாதந்தோறும் சராசரியாக நான்குடக்றர்மார்வீதம் விலகிக்கொண்டு வருகிறார்கள். தங்களுக்குப் போதியசம்பளம் கொடுபடுவதில்லை, தனிப்பட்ட வைத்தியஞ்செய்ய அனுமதியில்லை, தகுந்த வசிப்பிடங்கள் இல்லை, வெளியூர் ஆஸ்பத்திரிகளில் போதியவசதிகள்இல்லை என்பனவாக இவர்கள் பலவிதமுறைபீடுகள் செய்கின்றார்கள். சுகாதார அதிகாரிகள் நடத்தியபரிசோதனையிலிருந்து கடந்த மூன்றுவருடங்களிலும் 40 முதல் 50 டக்றர்மார் அரசாங்கசேவையிலிருந்து விலகியிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஏலவே போதியடக்றர்மார்இல்லாது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அரசாங்கவைத்தியபகுதிக்கு இவ்விதம் டக்றர்மார்விலகுவது பெரும் பிரச்சினை ஒன்றை உண்டுபண்ணிவிட்டிருக்கிறது. இப்போது வைத்தியபகுதியில் 800 டக்றர்மாரே இருந்துவருகிறார்கள். அரசாங்கசேவையைவிட்டு விலகியடக்றர்மார் தனிப்பட்டமுறையில் வைத்தியஞ்செய்து நன்றாகச்சம்பாதித்துவருகின்றார்கள்.

### வனமகோற்சவமும் பாடசாலைகளும்

வருகிற ஐப்பசிமுதல் மார்கழிவரையிலே நடத்தப்படவிருக்கும் வனமகோற்சவத்தில் இலங்கையிலுள்ள பாடசாலைகளெல்லாம் பங்குபற்றி உணவுஉற்பத்தி இயக்கத்துக்குஊக்கமளிக்க வேண்டுமென்றுகேட்டுப் பாடசாலைகளுக்குச் சுற்றுக்கடிதம்ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. கமத்தொழில் –உணவுமந்திரியாரா திரு. ஜே. ஜயவர்த்தன அவர்களே வனமகோற்சவத்தை நடத்தவிருக்கின்றார். அரசாங்கஏசன்றர்கள் இந்தஇயக்கத்துக்குப் பூரண ஆதரவு அளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### பிரதமரும் சமயங்களும்

கண்டியிலே மல்வத்தை மகாநாயக தேரோவின் நியமனவைபவம் சம்பந்தமாய் அன்னாருக்கு அளிக்கப்பட்ட ஓர் வரவேற்பின்போது பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்கள் பேசியதுவருமாறு: "எங்கள் சமயத்தை நாம் எவ்வாறு கௌரவிக்கிறோமோ, அவ்வாறே இந்நாட்டில்வசிக்கும் ஏனையவர்களின் சமயங்களையும் கௌரவிக்க வேண்டும். நாம் அவ்வாறு செய்யாவிடின் சமாதானம் ஒருபோதுமே நிலைத்திருக்கமாட்டாது. இலங்கையின் சனத்தொகையில் 40 லட்சம்பேருக்கு மேலுள்ள புத்தர்களாகியநாம் பல்வேறுசமயங்களையும், மொழிகளையும், பாரம்பரியங்களையும் கௌரவிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். சமாதானம், நல்லெண்ணம், அன்புஆகிய நற்குணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது புத்தசமயம். மறுசமயத்தவர்களுடன் நாம் சமாதானமாயும், அன்பாயும் வாழாவிட்டால் எம்மைப் புத்தர்களென்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லாமற் போய்விடும்."

> **துன்பத்தை அனுபவிக்காதவர்களால் வாழ்வின் சுவையை அறியமுடியாது. துன்பநெருப்பில் புடம்போடப்பட்டவர்களே வாழ்வின் இன்பத்தை அனுபவிக்க முடியும்.**

### நெல்வாங்கப் பணம்

உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கமக்காரரிடம் நெல்வாங்குதற்கென்று அரசாங்கம் இவ்வருடத்தில் 23 கோடிரூபா ஒதுக்கிவிட்டிருந்தது. ஆயின் இந்தப்பணம் போதாமையாலே இந்தநிதிவருடத்திலே அதற்கென்று மேலும் 3 கோடிரூபாசெலவிடத் தமக்குஅதிகாரம் அளிக்குமாறு கமத்தொழில் – உணவு மந்திரியாரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனஅவர்கள் மந்திரிசபைக்கு ஓர் அவசரவேண்டுகோள் செய்திருக்கின்றார். இந்தநிதிவருடம் முடிவதற்குள் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கமக்காரர் அரசாங்கத்துக்கு 1 கோடிபுசல்நெல் விற்பார்களென அப்போது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இப்போது 1 கோடியே 25 லட்சம் புசல்வரையிலே விற்பார்களென மதிப்பிடப்படுகிறது. மேலும் வழமையிலே தாங்கள் விளைவித்தநெல்லைப் பிரத்தியேக மில்காரருக்கு விற்றுவந்தகிராமவாசிகள் தற்போதுநேரே அரசாங்கத்துக்கு விற்றுவருகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலையேறப்பெற்ற முத்து

ஓர்முறை நமது திவ்வியஇரட்சகர் முத்தின்உவமைஒன்றை எடுத்துக்கூறினார். அதாவது, "மீளவும் பரலோக இராச்சியமானது நல்லமுத்துகளைத் தேடுகிற வர்த்தகனுக்கு ஒப்பாயிருக்கின்றது. அவன் விலையேறப்பெற்ற ஓர் முத்தைக் கண்டமாத்திரத்தில் போய்த் தனக்குண்டான யாவற்றையும்விற்று அதை வாங்கிக்கொள்ளுகிறான்" (மத். XIII. 45, 46) எனத் திருவுளம்பற்றினார்.

உவமையில்சொல்லப்பட்டுள்ள இந்த விலையேறப்பெற்ற முத்துயாது? தேவ இஷ்டப்பிரசாதமே. அதனை விலைக்கு வாங்கிய வர்த்தகன்யார்? நமதுஇரட்சகராகிய யேசுக்கிறீஸ்துநாதரே. அவர்தமக்குண்டானயாவையும் பரித்தியாகஞ்செய்து இஷ்டப்பிரசாதமாகிய மோட்சமுத்தை நமக்காக வாங்கியிருக்கிறார். அதைப் பெற்றுக்கொள்ள இஷ்டமுள்ளோருக்கு அவர் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார். இந்தமுத்து நம்மிடம்இருந்தால் நமக்குச் சகல செல்வபாக்கியமும் உண்டு. இல்லையேயானால் நாம் ஏழைபாசகரிலும் எளியவராவோம். பரலோகஇராச்சியத்தினுள்நுழையச் சுதந்தரங்கொடுப்பதும் இந்தத்தெய்வீக முத்தேயாகும்.

இந்தவிலைமதிக்கப்படாத முத்து தேவஇஷ்டப்பிரசாதம். ஓர்முத்தின் விலை அதன்அழகிலும், அதனால் நமக்கு வரக்கூடிய பயனிலும் அடங்கியிருக்கிறது. எவ்வளவாக ஓர் முத்து பார்வைக்கு நேர்த்தியாய் இருக்குமோ அவ்வளவாக அதன்விலையும் உயருகிறது. அதன்பயனும் அதிகரிக்கிறது. தேவ இஷ்டப்பிரசாதம் இவ்விரு குணங்களையும் உடையது.

நம்மிலேவாசஞ்செய்து, நம்மை அர்ச்சித்துச் சர்வேசுரனுக்குப் பிரியமாக்குகிற தேவவரமே தேவஇஷ்டப்பிரசாதம் எனப்படும். ஞானஸ்நானத்தினாலே இந்தத் தேவவரத்தை நாமெல்லோரும் அடைந்துகொள்ளுகிறோம். இஷ்டப்பிரசாதத்தைத் தேவசௌந்தரியத்தின் திவ்வியகதிர் என்பது வழக்கம். இந்தக்கிரணது நமதுஆத்துமத்தை ஊடுருவிச்சென்று அதைத் தனதுசோதிப்பிரகாசத்தினால் விளங்கச்செய்யும். உலையில்இட்டுக் காய்ச்சிய இரும்பானது எப்படி நெருப்பின்உஷ்ணத்தையும், பிரகாசத்தையும் பெற்றுக்கொள்ளுகிறதோ, அப்படியே நமதுஆத்துமமும் ஓர்வித தேவலோககாந்தியையும், பிரகாசத்தையும் பெற்றுக்கொள்ளுகிறது. இஷ்டப்பிரசாதமும், சாவானபாவமும் ஓரே இடத்தில் ஒன்றாயிருக்க முடியாது. ஏனெனில், பாவம் இருளுக்குச்சமானம். இஷ்டப்பிரசாதமோ தேவசூரியனின் பூரணப்பிரகாசம்.

உலகஆரம்பமுதல் இதுவரை கட்டிக்கொள்ளப்பட்ட பாவங்களும், இனிக் கட்டிக்கொள்ளப்படும் பாவங்களும் ஒன்றாகச்சேர்ந்து ஓர்ஆத்துமத்தில்இருந்தாலும் தேவஇஷ்டப்பிரசாதத்தின் ஒரேயொருகதிர் அவ்வாத்துமத்தில்படுமானால் அந்தட்சணமே பாவங்கள் அனைத்தும் ஒழிந்துபோக, ஆத்துமம் தெய்வீகஒளியால் பிரகாசிக்கும். இப்பிரகாசத்தினால் அலங்கரிக்கப்பட்ட ஆத்துமத்தில் சர்வேசுரன் தமதுதேவசுபாவத்தின் உத்தம சாயலைப் பதிக்கிறார். கண்ணாடியின் மீது சூரியகிரணம்பட்டால் எவ்வாறு அக்கண்ணாடிமுழுவதும் சூரியனின்பிரகாசத்தினால் செகசோதியாய் விளங்குமோ அவ்வாறே நமதுஆத்துமம் தேவசௌந்தரியத்தையும், தேவமகத்துவத்தையும் பிரதிபலிக்கும் அழகிய கண்ணாடியாக மாறிவிடுகிறது.

சியன்னாநகர அர்ச். கத்தரீனம்மாள் ஓர்முறை தேவசிநேகத்தின்பேரில் தியானஞ்செய்துகொண்டிருக்கும்போது, யேசுக்கிறீஸ்துநாதர் நீச மனுஷராகியநம்மை மகாஆச்சரியத்துக்குரியவிதமாய்ச் சிநேகித்து, நமக்காகத் தமதுஉயிரைக் கொடுத்ததற்குக் காரணம் என்னவென்றுஅறியாது தயங்கினாள். அப்போது திவ்விய இரட்சகர் அப்புண்ணியவதிக்குக் காட்சியளித்துத் தேவஇஷ்டப்பிரசாத அந்தஸ்திலுள்ள ஓர் ஆத்துமத்தைக் காண்பித்து, "இதோபார், இத்துணை அழகுள்ள ஆத்துமத்துக்காக நான் உலகில்பிறந்து பாடுபட்டுஇறந்தது நியாயமல்லவா?" என்றார். அதுமுதல் கத்தரீனம்மாள் பாவிகளைமனந்திருப்பி, அவர்களின்ஆத்துமங்களை இஷ்டப்பிரசாதத்தினால் அலங்கரிக்கும்பணியிலே அமர்ந்திருந்தகுருமார் நடந்துசெல்லும்காலடிகளை முத்தமிடத்தொடங்கினாள். இதனால்தான் நமதுஆண்டவர் "மனந்திரும்புகிற ஓர்பாவியினிமித்தம் மோட்சத்திலும் சம்மனசுக்களிடத்திலும் சொல்லவொண்ணாச் சந்தோஷமுண்டாகும்" என்று திருவுளம்பற்றியிருக்கிறார். "தவறிப்போன மார்க்கத்தினின்று பாவியைத்திருப்புகிறவன் தன்ஆத்துமத்தை மரணத்தினின்று இரட்சித்துத் திரளானபாவங்களை மூடுவான்" என்று வேதாகமத்தில் சொல்லியிருப்பதற்கும் இதுவேகாரணம். சந்நியாசர்கள், கன்னியாஸ்திரிமார், குருமார் எல்லோரும் இக்காரணத்தைமுன்னிட்டுத்தான் தங்கள்குடும்பத்தையும், அரியசுற்றத்தவரையும் விட்டுப்பிரிந்து, தேவ ஊழியம் செய்துவருகிறார்கள். இதனிமித்தமே புண்ணியவாளர்களாகிய விசுவாசிகள் தங்கள்பிள்ளைகளைத் தேவஊழியத்துக்கு மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்கிறார்கள். பிறர்சிநேகத் தொண்டுகள் விருத்தியாகப் பொருளுதவிசெய்கிறார்கள். ஏழைப்பிள்ளைகள் பாவஞ்செய்து இஷ்டப்பிரசாதத்தை இழந்துவிடாவண்ணம் அவர்களை அநாதர்கள்மடங்களுக்குஅனுப்பி ஆதரித்துவருகிறார்கள். சிறுவருக்கு ஞானோபதேசம் கற்றுக்கொடுக்கிறார்கள். அஞ்ஞானிகள் மனந்திரும்பத்தக்கதாக மன்றாடிவருகிறார்கள்.

இஷ்டப்பிரசாதமுள்ள ஓர்ஆத்துமம் சர்வேசுரனின் நன்மைத்தனத்துக்கும், அர்ச்சியசிட்டதனத்துக்கும் பங்காளியாகிறது. அதனால்தான் அர்ச். சின்னப்பர் தேவஇஷ்டப்பிரசாதத்தோடிருக்கும் கிறீஸ்துவர்களை அர்ச்சியசிட்டர்கள்என்று அழைக்கிறார். அந்தஆத்துமத்தின் உந்நத அழகுசௌந்தரியத்தைப் பார்த்து அர்ச். தமதிரித்துவம் அன்புடன் அதில்வசிக்கத்தொடங்குகிறது. இந்த ஆத்துமம சர்வேசுரனுடைய தேவாலயமாகிவிடுகிறது.

தேவஇஷ்டப்பிரசாதம் நம்மைச் சர்வேசுரனின் சுவீகாரப்புத்திரர் ஆக்குகிறது. சுபாவஅந்தஸ்தில் நாம் அவருடையசிருட்டிகள், ஊழியர், அடிமைகள். ஆனால், ஏழையாசகனின்பிள்ளையை ஓர்பெரிய அரசன் தனது சுவீகாரப்புத்திரனாக ஏற்றுக்கொள்வானாகில், எப்படி அவனைத் தனதுசொந்தமகனைப்போல் பாவித்து, வெகுவாகநேசித்து, அவனுக்கு இராசஉடைதரித்துத் தனதுசிம்மாசனத்துக்கும், தேசத்துக்கும் சுதந்தரவாளியாக்குவானோ அதேபிரகாரம் சர்வேசுரன் நமதுஆத்துமத்துக்கு இஷ்டப்பிரசாதத்தை அளித்து, நம்மைத் தமதுசுவீகாரப் புத்திரராக ஏற்றுக்கொண்டு, பரலோகஇராச்சியத்துக்குச் சுதந்தரவாளர்ஆக்குகிறார். நாமும் விலைஉயர்ந்த இராசஉடைகள், இரத்தினாபரணங்களை அணிந்த இராசகுமாரருக்குச் சமானமாகிறோம்.

தேவஇஷ்டப்பிரசாதம் ஆத்துமத்தின் ஞானஉயிர். ஞானஸ்நானத்தை இரண்டாவதுபிறப்பு என்றுசொல்ல இதுவேகாரணம். தாய்வயிற்றினின்று பிறக்கும்பிள்ளைக்குச் சுபாவஉயிர் மாத்திரமுண்டு. ஞானஸ்நானத்திலோ சுபாவத்துக்குமேலான தேவஉயிர் கொடுக்கப்படுகிறது. இந்தத்தேவ உயிரினால் நித்தியசம்பாவனைக்குரிய நற்கிரிகைகளைச்செய்ய உந்நதசக்தி உண்டாகிறது. ஞானஸ்நானம் பெறாதவனுக்குச் சுபாவஉயிர் மாத்திரம் இருப்பதால் அவன்செய்யும் நற்கிரிகைகளுக்கு மோட்சத்தில் சம்பாவனை இராது. ஞானஸ்நானத்தினாலே நாம் இஷ்டப்பிரசாதத்தோடு விசுவாசம், நம்பிக்கை, தேவசிநேகம் என்னும் தேவசம்பந்தமான புண்ணியங்களையும் பெற்றுக்கொள்ளுகிறோம். நமது ஆத்துமம் நன்னடக்கைக்குரிய புண்ணியங்களாலும், இஸ்பிரீத்துசாந்துவின் வரங்களாலும் அலங்கரிக்கப்படுகிறது. இவைகள் நமது ஆசாபாசங்களைச் செயித்துச் சுபாவத்துக்குமேலான நற்கிரிகைகளைச்செய்து மோட்சசம்பாவனையடைய நமக்குச் சக்தியளிக்கின்றன.

— R. M. S.

# ஆசா. பிறெடறிக் ஓசானம்

(தமிழாக்கம்: ஆசிரியர், எல். பாக்கியநாதர்)

சென் வின்சென்ற் டீ போல் தருமசபையினர் நெடுநாளாய் வெகுஆவலுடன்மன்றாடிச் செய்துவருகின்ற வேண்டுதல்கள் நிறைவேறுங்காலம் இதோ வந்துவிட்டது. இத்தருமசபையின் ஸ்தாபகரும், பிரபலபிரான்சிய சட்டபோதகாசிரியருமான பிறெடறிக் ஓசானம் அவர்களுக்கு முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டும்விசாரணை அதிகாரபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்விசாரணையை நடத்துமாறு உலகின் பல்வேறுபாகங்களிலுமிருந்து முப்பதின்மருக்குமேற்பட்ட கருதினால்மாரும், ஆயிரக்கணக்கான அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும் பாப்பரசருக்கு விண்ணப்பஞ் செய்துள்ளனரெனத் திருச்சடங்காசார திருச்சங்கம் அறிவித்துள்ளது. இவருக்குமுன்னரே, இவரின் சிஷர்களில்ஒருவரான கொன்ரார்டோ பெறினிஎன்பாருக்கு முத்திப்பேறுபெற்றபட்டஞ் சூட்டப்பட்டுவிட்டது.

பிறெடறிக் ஓசானம்அவர்கள் ஓர் நியாயவாதியாகவே தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். பிரபல நியாயவாதியாகவே பிரான்ஸ்தேசம்முழுதும் அறியப்பட்டார். ஆயின், சிலகாலத்துள்ளேயே ஓர் சாதாரணகத்தோலிக்க அப்போஸ்தலனாக மாறிவிட்டார்.

## முன்மாதிரிகை

பிரபலம்பெற்ற விஞ்ஞானியான அம்பெ என்பாரின் முன்மாதிரிகையைப் பின்பற்றியும், அக்காலத்தில் கத்தோலிக்கருக்கு விரோதமாகச் சொல்லப்பட்டவசைகளுக்கு ஓர்மாற்றுமருந்தாகவும் ஓசானம் இத்தருமசபையை அடியிட்டார். விஞ்ஞானியான அம்பேயும், ஓசானமும் கலாசாலைத் தோழர். விஞ்ஞானியின் தூயவாழ்க்கை சட்டமாணவனான ஓசானத்தைக் கவர்ந்தது. எமது தூயவாழ்வு எம்மைமாத்திரமல்ல, எம்மைச் சூழ்ந்தாரையும் தூயவராக்கும்என்பதற்கு இது எடுத்துக்காட்டத்தக்க உதாரணமல்லவா?

சட்டபோதகாசிரியராய் இருக்கும்போதே ஓசானம் பலமாணவர்களைச் சேர்த்து ஓர் படிப்புக்கழகத்தை நடத்தினார். இக்கழகத்தில் கத்தோலிக்கர் மாத்திரமல்ல, காரணவாதிகளும், முகமதியரும் சேர்ந்திருந்தனர்.

இக்கழகத்தில் சேர்ந்திருந்த ஏழு கத்தோலிக்க அங்கத்தவரும் படிப்பிலே மாத்திரம் திருப்தியடையவில்லை. படிப்புமுடிந்ததும் மறுவேதானுசாரங்களை அநுட்டிக்கவும், பிறர்சிநேகக் கிருத்தியங்களைச் செய்யவுந்தொடங்கினர்.

இவர்கள் தமது வேதானுசாரங்களிலும், பிறர்சிநேகக் கிருத்தியங்களிலும் வைராக்கியத்துடன் வளர்ந்து வந்ததற்குக் காரணம் யாதெனில், பிறசமயத்தவர்கள் கத்தோலிக்கர்மீது சொரிந்த வசைமாரியேயாகும். இந்தவிபரத்தை ஓசானமே தமதுமரணத்திற்கு முன் வெளியிட்டார். கத்தோலிக்க சமயத்தின் மகத்துவத்தை — அதன் சிறப்புகளை ஓசானம் மற்றவர்களுக்கு எடுத்துரைக்கும் போதெல்லாம் அவர்கள் அவரை கையாண்டிபண்ணுவர். "நீர் சொல்லுகிறவை எல்லாம் மெய்; ஆனால், அவையெல்லாம் அந்தக்காலத்தன; இந்தக்காலம் கிறீஸ்துவம் இறந்துவிட்டது" என்றே அவர்கள் ஓசானத்துக்குச் சொல்வர்.

## குறைவை நிறைவாக்கல்

"உங்கள் வேதவிசுவாசத்தையும், தேவநேசத்தையும் வெளிப்படையாகக்காட்டும் சேவைகள்எவை?" என்று அவர்கள் அவரைக் கேலியாய்க்கேட்டனர். "உங்கள் வேதவிசுவாசத்தை நாம் மதிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டிய அவசியம்என்ன?" என்று அவர்கள் பலமுறையும்அவரை ஏளனமாய்க்கேட்டனர். இந்தக் கேள்விகளுக்கு விடையாக அடியிடப்பட்டதே இத்தருமசபை. இச்சபை அவர்கள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் தக்க விடை பகருகின்றது.

இச்சபை உலகம்முழுதும் பரம்பும் என்றும், இச்சபையின்சேவை உலகம் முழுதும் ஓம்பப்படும்என்றும் இதை அடியிட்டவர்கள் சற்றேனும் எண்ணியிருக்கவில்லை. ஆரம்பகாலத்திலே சிலர் தம்மையும் இச்சபையின் அங்கத்தவராகச் சேர்க்கும்படி விண்ணப்பித்தால் சபைஸ்தாபகர் தீர்க்கஆலோசனைசெய்தே அவர்களை அனுமதிப்பார். தமது 40-ம்வயதில் ஓசானம் மரித்தார். அவர் இறக்கும்போதே இச்சபை ஐரோப்பாவின் பலபாகங்களிலும் பரவியிருந்தது. இன்று இச்சபை திருச்சபையிலுள்ள சாதாரண கத்தோலிக்கர் நடத்தும் ஸ்தாபனங்களில் மிகப்பெரிய ஸ்தாபனமாக விளங்குகின்றது.

வின்சென்ற் டீ போல் தருமசபையின் ஸ்தாபகரான பிறெடறிக் ஓசானம் தமது தாய்தந்தையரிடமிருந்தே வறியவர்கள்மீது அன்புகொள்ளப் பயின்றுகொண்டார். வறியவர்கள்மீது தமதுபெற்றார் கொண்டிருந்த தயவு ஓசானத்தின் இளம்இதயத்தில் ஆழமாகப்பதிந்தது. இவரின் தந்தை ஓர் வைத்தியர். மிலான்நகரில் வைத்தியத்தொழிலாற்றி வந்தவர். தாயோ வறியவர்களையும், வியாதிஸ்தர்களையும் ஒழுங்காகத்தரிசிக்கும் உத்தமதொண்டில் ஈடுபட்டுவந்தாள்.

## இருவர்களவும் பிடிபட்டது

தந்தை தமது வைத்திய சேவையை அநேகவறியவர்களுக்கு இனாமாகச் செய்துவந்தார். குடிசனம்நெருங்கிய இடங்களில்வசிக்கும் எளியவர்கள் இவரின் தயவிலே தங்கிவாழ்ந்தனர். தாயுந் தந்தையும் தருமகாரியங்களில் ஒருவருடன்ஒருவர் போட்டிபோட்டனர். தாயின் சுகத்தாழ்வுகாரணமாக அவள் வியாதிஸ்தரைத் தரிசிக்கப்படாது என்று தந்தைவிரும்பினார். தந்தைதன்னிடம் எதைவிரும்புகிறாரோ அதைத் தானும் தந்தையிடம் விரும்புவதாகத் தாய்கூறினாள். இருவரும் தங்கள் பொருத்தனைக்குச் சம்மதித்தனர். ஆனால், சம்மதித்த சொற்பநேரத்துள் வயதுசென்ற ஒருவருத்தக்காரியின் படுக்கைக்குப் பக்கத்திலே ஒருவர் மற்றவரைச் சந்திக்க நேரிட்டது. "தந்தையிடம் தாய் மன்னிப்புக்கேட்டாள்; தாயிடம் தந்தை மன்னிப்புக் கோரினார்" என்று ஓசானத்தின் சரிதையைஎழுதிவைத்த வண. ஜே. புறெடிக்சுவாமியார் கூறுகிறார்.

ஒருபெரியார் இறந்தபிறகும் அவரால் முன்பே ஏற்றிவைக்கப் பட்டவிளக்கு, அதாவது அறிவு ஒளி மற்றமனிதர்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவறந்தாங்கிய பிரபுதம்பதிகள்

பிரான்சிலே அதிபுராதனமும், அதிகம் கீர்த்திவாய்ந்தனவுமான குடும்பங்களுள்ஒன்றின் தலைவர்களான மாக்குயிஸ் தேவோக்பிரபுவும், அவர்பாரியாரும் 35 வருடகாலம் மனப்பாக்கியமாக இல்லறவாழ்க்கை நடத்தியபின்னர் துறவறவாழ்க்கையை மேற்கொண்டு, ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்து, இரு துறவறமடங்களில் பிரவேசித்திருக்கின்றனர். உல்லாசப்பிரயாணத்தையும், மிகவிஸ்தீரணமான தமது தோட்டப்பிரதேசத்தில் வேட்டையாடுவதையும் "ஷத்தோ தலவெர்றி" என்ற அழகிய கோபுரத்துடன்கூடிய தமதுமுன்னோர்களின் மாளிகையிலே மிதமிஞ்சியசெலவுசெய்து அதிதிகளை விருந்திட்டுஉபசரிப்பதையுமே வெகுவாக ஆசித்து உலகில் ஆடம்பரவாழ்க்கை நடத்திவந்த ஓர்மனிதரான மாக்குயிஸ் தேவோக்பிரபுஅவர்கள் தாம்அத்துணை பிரஸ்தாபம் பெற்றிருந்த உலகத்துக்கும், அதன் சுகபோகங்களுக்கும் சமீபத்திலே பிரியாவிடைகூறலாயினர்.

இவர் பிரான்சிலே அதிகம்புராதன பிரபுத்துவபட்டங்களுள் ஒன்றைத்தாங்கிய ஓர்பிரபலகுடும்பத்தைச் சேர்ந்தவர். கடந்தநூற்றாண்டில் தெவோக் எனும் நாமத்துடன் கீர்த்திவாய்ந்த இருபிரமுகர்கள் விளங்கியிருந்தனர். இவர்களில் ஒருவர் பெரியஅரசியல்வாதியாவர். மற்றவர் ஓர்எழுத்தாளர். இருவரும் பிரான்சிய சாஸ்திரக்கழகத்தில் அங்கத்தவர்களாய் இருந்துவந்தனர். இவர்களின் சுற்றத்தவரான தற்போதைய இந்தமாக்குயிஸ்பிரபு பிரான்சிலுள்ள மிகப்பெரிய செல்வந்தர்களில்ஒருவர். பிரபுக்கள்வம்சத்துக்குத் திலகமான 63 வயதுடைய இவரும், 58 வயதுடைய இவர் பாரியாரும் நெடுங்காலத்தின்முன்னரே துறவறவாழ்க்கையை—அதாவது பிரபு ஓர் ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசியாகவும், பாரியார் நோயாளரைப்பராமரிப்பதற்கும், பரீஸ் நகரிலே அதிகம் வறியமக்கள் வதியும் பகுதிகளிலே தேவைப்படுவாருக்கு உதவிசெய்வதற்குமாக இருந்துவருகின்ற கிறீஸ்துநாதரின்மோட்சாரோகணசபையில் ஓர்சின்னக்கன்னியாஸ்திரியாகவும் தீர்மானித்தார்கள்.

ஆனால், தங்கள்பிள்ளைகள் எல்லோரையும் வாழ்க்கையிலே ஒருகரைப் படுத்துகிறவரையில்காத்திருந்தார்கள். இவர்கள் கடைசிமுறையாகத் தங்கள் பிள்ளைகளுடன், குடும்பமாகச் சென்ற ஆவணி 12-ந்திகதியன்றுஒன்றுகூடியது "ஷ பெல் த பிற்ஞ்ஞி" எனும் சிற்றாலயத்திலாகும். அப்போதுதான் 2[illegible] வயதுடைய ஜியோபிறேஎனும் இவர்களின் கனிஷ்டபுதல்வருக்குத் திருமணம்நிறைவேறியது. அவ்வேளை இவர்களின் ஐந்து புதல்வர்களில் ஒருவர்மாத்திரம் — அதாவது லபியேர் கிவிர் எனும்இடத்திலுள்ள ஆசீர்வாதப்பர் சபைமடத்தில் ஓர்குருவாய் இருந்துவருகின்ற வண. அடல்பேட் சுவாமியார்மாத்திரமே சமுகமாகவில்லை. தந்தையான பிரபு இந்தப் புரட்டாசிமாதம் 15ந்திகதியன்று அந்தமடத்தில்பிரவேசித்துத் தமது குருபுதல்வருடன் சேர்ந்துகொண்டார். அன்றுதினமே அவர்பாரியாரும் முன்சொன்ன கன்னிகாமடத்தில் சேர்ந்துகொண்டார். இவர்களின் பிரியாவிடையையிட்டு ஓர்பெரும் உபசரணைவைபவம்நடைபெறலாயிற்று. ஆனால், இவர்கள் கடைசிமுறையாகப் பகிரங்கத்தில் காட்சியளித்தது, வசொன்எனும் பிரான்சியசுக்கிராமத்தில் நடைபெற்ற மோட்சாரோபண திருநாள் சுற்றுப்பிரகாரத்திலே யாகும். அதிலே இவர்கள் சாதாரண கிராமவாசிகள்போன்று குருவானவரின்பின்னே நடந்துசென்றார்கள். உலகில் தங்கள் ஆடம்பரவாழ்க்கை தங்களுக்கு ஒருபோதுமேகொடுத்திராத இன்பசந்தோஷங்களைத் தங்கள்புதிய வாழ்க்கையில் கண்டுகொள்ளலாமென இவர்கள்நம்புகிறார்கள்.

## மரியாயின் சேனையும் மனந்திரும்புதலும்

ஜப்பானிலே யொக்கோஹாமா மேற்றிராசனத்தில் மரியாயின்சேனையார் எடுத்துக்கொண்ட பிரயத்தனங்களாலே பன்னிருமாசங்களில் 500 ஜப்பானியர்கள் மனந்திரும்பிக் கத்தோலிக்கதிருமறையில் சேர்ந்திருக்கிறார்கள். மரியாயின் சேனை ஜப்பானிலே 280 பிறெசீடியங்களைக் கொண்டிருக்கிறது. இவற்றில்ஒன்று வடஜப்பானிலே குஷ்டரோகர் குடியேற்றதலம்ஒன்றில் இருந்துவருகிறது ஏற்கனவே குஷ்டரோகர்கள்நால்வர் மனந்திரும்ப அதுவே காரணமாயிருந்தது. மற்றும்நான்கு குஷ்டரோகிகள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற ஆயத்தஞ்செய்துவருகிறார்கள்.

## அபிசீனியாவும் கத்தோலிக்க சமயமும்

அபிசீனியா (எத்தியோப்பியா) வின் தலைநகராகிய அடிஸ் அபாபாவில் பேராசிரியராக இருந்துவரும் திரு. பி. எஸ். ஆபிரஹாம் அவர்கள் திருச்சி, அர்ச். சூசையப்பர் கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தின் தலைவர் அவர்களுக்கு எழுதிய கடிதம் "அல்மா மாத்தர்" சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதில் சிலபகுதிகள் வருமாறு: எத்தியோப்பியா ஒரு கிறீஸ்துவநாடு. அதை ஆண்டுவருபவர் அதிகசெல்வாக் குடையவரும், புத்திக்கூர்மை வாய்ந்தவருமான ஒருகிறீஸ்துவர். அவர் கோப்திக்என்ற பிரிவினைச்சபையைச் சேர்ந்தவர். கோப்திக் மதம் தேசியமதம். சக்கிரவர்த்தியே அதன்தலைவர். கத்தோலிக்கர் இங்கு சிறுபான்மையோராக இருக்கின்றனர். நாடுமுழுவதுக்கும் ஒரேயொரு கத்தோலிக்கமேற்றிராணியார் இருக்கிறார். அடிஸ்அபாபாநகரில் ஏழு கத்தோலிக்க கோயில்கள் இருக்கின்றன. இந்தநாட்டிலுள்ள கத்தோலிக்க கோயில்களில்எல்லாம் திவ்வியபலிபூசை 'கெஸ்' என்றபாஷையில் நடத்தப்படுகிறது. இதுதான் பண்டைக்கால எத்தியோப்பிய பாஷை. இது சமஸ்கிருதத்தை ஓரளவிற்குஒத்திருக்கிறது. சிலமாகாணங்களில் பிரான்சிய கப்புச்சின்குருமார் மிஷனரிய அலுவல் புரிந்துவருகின்றனர். இங்கு கல்வி மிகவும் பிற்போக்கான நிலையில் இருந்துவருகிறது. நாடுமுழுவதுக்கும் ஒரேகல்லூரிதான் இருக்கிறது. இந்தக்கல்லூரியே பட்டங்கள் அளிக்கிறது. அதிர்ஷ்டவசமாக இக்கல்லூரி கனடாதேச யேசுசபைக்குருமாரால் நடத்தப்பட்டுவருகிறது. இந்தக்குருமார் கல்லூரியிலும், வெளியிலும் குருத்துவஅங்கிதரியாமல் சாதாரணஉடைகளையே அணிந்துவருகின்றனர். அவர்களுடையகல்லூரியில் ஒருபிரத்தியேககோயில்இருக்கிறது. அதில் தான்அவர்கள் திவ்வியபூசைப் பலி நிறைவேற்றுகின்றனர்.

## முப்பது நாடுகளின் யாத்திரிகர்கள்

அன்றோர்நாள் சனிக்கிழமை காஸ்தெல் கான்டல்போவிலுள்ள பாப்பரசரின் கோடைகாலமாளிகையிலே அருளப்பட்ட பொதுப்பேட்டிஒன்றின்போது, முப்பதுக்குமேற்பட்ட ஐரோப்பிய நாடுகளிலிருந்துபோன யாத்திரிகர்கள்குழாமின் மத்தியிலிருந்துஎழுந்த "எங்கள் முன்னோரின் வேதவிசுவாசம்" எனும் இன்பகீதமானது பரிசுத்தபிதாவின் விசேஷகவனத்தை ஈர்ந்துகொள்ளலாயிற்று. அதனைப்பாடியவர்கள் றொஸ்மினியயாத்திரிகர்களாவர். இவர்கள் ஓர்கூட்டம் மாணவர்களே. அப்பேட்டியின்போது, அவர் மேல்மாடிக்கும்,நகரமைதானத்துக்கும்மேலாகத் தோற்றமளிக்கும்சன்னலுக்கும் மீண்டும்மீண்டும்சென்று அவர்களின் வாழ்த்தொலிக்கு மாறுத்தரம்அளித்து ஆசீர்வாதம் அருளலாயினர். அடுத்த திங்கட்கிழமை அவர் உலகசைக்கிள்ஓட்டப் போட்டியிலே கலந்துகொண்டவர்களுக்கும், அதனைஒழுங்குபடுத்தியவர்களுக்கும் விசேஷபேட்டிஒன்று அருளலாயினர். இந்தப்போட்டி காஸ்தெல் கான்டல் போவிலிருந்து சற்றுத்தூரத்திலே அல்பான் குன்றுகளிலுள்ள பிறாஸ்காத்திவீதியில் நடைபெறலாயிற்று.

## ஓர்கிராமம் முழுவதும்

பொக் - ரிஜாய்என்ற தென்கோறியநாட்டுச் சிறியகிராமம் முழுவதும் கம்யூனிஸ்த வடகோறியாவிலிருந்து வந்த ஓர் அகதியான புறொட்டஸ்தாந்த கன்னியாஸ்திரியால் விரைவிலே ஓர்கத்தோலிக்ககிராமமாக மாறவிருக்கின்றது. இந்தக் கன்னியாஸ்திரீயான சிஸ்றர்சூக்அம்மாள் தனது புறொட்டஸ்தாந்த கன்னிகாமடத்தைத் தாபரிப்பதற்கென்று கூடைகள்விற்பதற்காக பொக் - ரிஜாய் கிராமத்துக்குச் சென்றபோது, அங்குள்ள புறொட்டஸ்தாந்தர்கள் பல்வேறுசபைகளாகப் பிளவுபட்டுப் பெரிதும்மனச்சந்தோஷம் அற்றவர்களாய் இருக்கக்கண்டு, "கத்தோலிக்கசபையிலே இப்படியான பிளவுகள் இல்லையென்று நான் நினைக்கிறேன்" என்று ஏறக்குறையச் சிந்தியாமலே கூறிவிட்டாள். இதைக்கேட்டதே அவர்கள் ஆச்சரியமுற்றவர்களாய் ஹாம்பியங் எனுமிடத்திலுள்ள கத்தோலிக்க குருவானவரிடஞ்சென்று, அதற்கெல்லாம் காரணமென்னஎன்று அவரிடம்கேட்டறிந்துவருமாறு உடனே தானே அந்தஅம்மாளை ஓர்தூதாக அனுப்பிவைத்தார்கள். அவளுஞ்சென்று, வண. தோமஸ் மோறன்சுவாமியாரைச் சந்தித்துத் தான்கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில்கள் பெற்று, கடைசியாகநான் மெய்யானதிருச்சபையைக் கண்டடைந்தேன்என்ற எண்ணத்துடன் பொக் - ரிஜாய்எனுமிடத்துக்குத் திரும்பினாள். தற்போது அக்கிராமத்திலுள்ள முப்பது குடும்பங்களும் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்ள ஆயத்தஞ்செய்து வருகின்றன.

## கன்னியாஸ்திரியான இளவரசி

பத்துலட்சம்மக்களின் இளவரசியான 24 வயதுடைய இபெட்மாஎனும் அரசகுமாரி சமீபத்திலே ஓர்புதன்கிழமை அயர் என அறியப்படுகின்ற சுதந்திர அயர்லாந்தில் கிலெஷன்ட்ரூ எனுமிடத்திலுள்ள திருச்செபமாலையின் தெரெஸ் மிஷனரிய கன்னியர்சபையில் சிஸ்றர் மேரியோசேப்பின் எனும்நாமத்துடன் ஓர்கன்னியாஸ்திரியானபோது, தனக்குரிய உலகசுகசெல்வ பாக்கியங்களையெல்லாம் உதறித்தள்ளிவிடலாயினள். இவள் ஓர்சுதந்திர நைஜீரிய இராச்சியமும், அயர்லாந்தின் மூன்றில்ஒருபங்கு பரிமாணமுடையதுமான ஒர்லு நாட்டின் அரசரான நாடிக்வு அகாசயர்மன்னரின் குமாரத்தியாவள். டபிளின் நகர சர்வகலாசாலைக் கல்லூரியிலே வைத்தியபட்டம்ஒன்றுக்குப் படிப்பதற்காக இவள்முந்த அயர்லாந்துக்குச் சென்றாள். ஆனால், சிலமாதங்கள்சென்றதும் கிலெஷன்ட்ரூவிலுள்ள கன்னிகாதாய்மடத்தில் பிரவேசித்தாள். இளவரசியான இந்தக்கன்னியாஸ்திரி ஓர்மிஷனரியாகத் தனதுசொந்தமக்களிடம் திரும்பஅனுப்பிவைக்கப்பட்டாலும் தனது சிரேஷ்டர்களின் இஷ்டப்படியே நடந்துகொள்வாள். அன்று புதன்கிழமை இவள் கன்னிகாசபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டபோது அவளின் தந்தையாரான அரசர் தமது நாட்டிலே எட்டுலட்சம் ரூபாசெலவில் கட்டிவருவதும், அர்ச். தெரேசம்மாள்பேரால் அர்ப்பணஞ்செய்யப் பட்டதுமான ஓர்புதியகோவிலின் பக்கமாகத் திவ்வியபூசை கண்டுகொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாசி மாதம்

**பொதுக் கருத்து:** பெண்களின் உரிமைப் பிரச்சினைகளுக்குக் கிறீஸ்துவ படிப்பினையின்படி முடிவுகாணும்படியாக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** அறியாமையைப் போக்குவதில் கிறீஸ்துவ கல்வி முதலிடம் வகிக்கும்படியாக மன்றாடிக்கோள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1955-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 22-ந் திகதி

## ஐக்கிய முன்னணி

— III —

பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள்சபையிலே அரசாங்ககட்சியென்றும், எதிர்க்கட்சியென்றும இருகட்சிகள் இருந்துவருகின்றன. ஆனல், பிந்திய எதிர்க்கட்சியானது இன்றைய உலகில் ஜனநாயக ஆட்சிக்கு எடுத்துக்காட்டுகளாகவிளங்கும் ஐக்கிய அமெரிக்கதேசம், பிரித்தானியதேசம் ஆதியாம் நாடுகளைப்போன்று ஓர் தனிப்பெருங் கட்சிஅன்று. பிரான்ஸ், இத்தாலி ஆதியாம் நாடுகளிற்போன்று பல சில்லறைக்கட்சிகள்ஒன்றுசேர்ந்த ஓர்எதிர்க்கட்சியேயாகும். இதிலே ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, நவலங்கா சமசமாஜ கட்சி, லங்காசமசமாஜகட்சி, கம்யூனிஸ்தகட்சி, தமிழரசுக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, சுயேச்சைக்கட்சிஎன்பனவாய்ப் பல்வேறுகட்சிகள் ஒன்றுசேர்ந்து ஒரு எதிர்க்குழுவாய்க் காட்சியளிக்கின்றன. இந்தஎதிர்க்கட்சியில் அடங்கியுள்ள இத்தனைகட்சிகளும் தம்முளே ஒன்றுக்கொன்று சாதகமான அரசியற்போக்கு உடையனவாயிருந்தால் பரவாயில்லை. ஆனல், இவைகள் தம்முளே ஒன்றுக்கொன்று முற்றுமே பாதகமான அரசியற்போக்கு உடையனஎன்பதை அறியாதவர்கள் இல்லையெனலாம். அங்ஙனமாக, பொதுத்தேர்தல் அடுத்துவருவதை முன்னிட்டு இந்தமுரண்பட்ட அரசியற்கட்சிகள் தம்முளே ஐக்கியமுன்னணி ஒன்றை அமைத்துவிடுமாறு எடாத எடுப்பெல்லாம் எடுத்து, படாதபாடெல்லாம் பட்டுவருகின்றன. ஆனல், அன்று ஓர்கூட்டத்திலே விப்ளவகார என்ற மறுலங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்கள் பேசியபோது: "பிரிந்திருக்கும் இந்த எதிர்க்கட்சிகள் ஒன்றுசேர்ந்து அடுத்ததேர்தலில் போராடாவிடின் ஐக்கியதேசியகட்சியே (யு என்.பி.) வெற்றிபெற்று...." என்றும், "ஆனல், எதிர்க்கட்சிகளை ஒன்றுசேர்ப்பது காட்டெருமைகளை ஒன்றுசேர்ப்பதுபோல் பெருங்கஷ்டமான ஓர் வேலையாகும்" என்றும் கூறியதிலிருந்து ஐக்கிய முன்னணி என்பது ஓர் அசாத்தியமான காரியமென்பது தானகவேபுலப்படுமன்றோ! இந்த எதிர்க்கட்சிகளிலே கம்யூனிஸ்த-சமசமாஜ கட்சிகள்மூன்றும் பொதுத்தேர்தல்விஷயமாய் ஓர்கால் ஐக்கியப்படுமானல்—ஓர் ஐக்கியமுன்னணியை ஆக்கிக்கொள்ளுகிறதானல் காட்டெருமைகளைப் பிடித்துப்பழக்கி வசப்படுத்த எவ்வளவுகாலஞ் செல்லுமோ அதிலுங்கூடியகாலம் தேவைப்படும். அப்போது செட்டியார் சிங்காரிக்கமுன் பட்டினம் பறிபோனவாறுய் அதற்குள் பொதுத்தேர்தல்நடந்து முடிந்துவிடும். சிலவேளை இந்தஎதிர்க்கட்சிகள் தமமுளே ஐக்கியப்பட்டு, ஓர் ஐக்கியமுன்னணியை ஆக்கிக்கொண்டு பொதுத்தேர்தலில் வெற்றிபெற்று, அரசாங்கத்தைநடத்த முன்வருமிடத்து என்னநடக்கும்? இவைகள் பிரதமர்பதவிக்கும்,பிறஅமைச்சர்பதவிகளுக்கும் தம்முளே சச்சரவுபடடுக் குடுமியிலே கைவைக்குமென்று சொல்லவேண்டியதில்லை. "அடுத்த பொதுத்தேர்தலிலே ஐக்கியதேசியகட்சி தோற்கடிக்கப்படுமானல் நவலங்கா சமசமாஜ கட்சிதான் புதிய அரசாங்கத்தை அமைக்கவேண்டுமேயன்றி வேறெந்தக்கட்சியும் புதியஅரசாங்கத்தை அமைக்கக்கூடாது" என்று நவலங்கா கட்சித்தலைவர்களில ஒருவரான டக்றர் கொல்வின் ஆர். டி சில்வாமுழங்கியிருக்கின்றார். இதைப்பற்றிக் கேள்விப்படுமிடத்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரான திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக அவர்கள்மனம் என்னபாடுபடுமோ? அதனல், எதிர்க்கட்சிகள் நடத்தும் ஐக்கியமுன்னணி அரசாங்கம் பிரான்சில்போன்று ஆறுமாதங்களுக்குஓர்தரம்கலையும் அரசாங்கமாகவே இருக்கும். நிற்க, இப்போது தமிழர்களினிடையே ஓர் ஐக்கியமுன்னணியை உருவாக்கும்முயற்சி நடக்கின்றது. தற்போது சனப்பிரதிநிதிகள் சபையிலே தமிழ்ப் பிரதிநிதிகளாய் எத்தனைபேர் இருக்கின்றனர்? வடமாகாணத்தில் ஒன்பதுபேரும், கிழ்மாகாணத்தில் நான்குபேருமாகப் பதின்மூன்றுபேர் இருக்கின்றனர். இவர்களிலே ஐக்கியதேசியகட்சியைச் சேர்ந்தோர் எத்தனைபேர்? அதனைச்சார்ந்துநிற்போர் எத்தனைபேர்? தமிழரசுகட்சியினர் எத்தனைபேர்? தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் எத்தனைபேர்? சுயேச்சைவாதிகள் எத்தனைபேர்? இவைகளையெல்லாம் ஆராய்வாகச் சிந்திக்குமிடத்து, ஐக்கியமுன்னணிஎன்பது தமிழ்மக்களின் ஐக்கியத்தைக் குலைக்கப்போகும் ஓர்பின்னணியென்றே சொல்லலாம். அதனல் பல்வேறு சில்லறைக் கட்சிகளிடையே இந்தஐக்கியமுன்னணியை ஆக்குவதைவிடுத்து, தமிழ்மக்களையெல்லாம் சனநாயகபோக்குடைய ஒரேகட்சியாக, ஒரேமுன்னணியாக ஆக்கிவிடின்—அடுத்த பொதுத்தேர்தலிலே தமிழர்களெல்லாம் பலம் பொருந்திய ஒரேகட்சியாக நிற்கநேரிடின் அப்போது அவர்களின் செல்வாக்கு அதிகமாகும். அவர்கள் நன்கு செயலாற்றமுடியும். எதிர்க்கட்சிகளின் விபரீதபோக்காலே அடுத்த [illegible] ஐக்கியதேசியக்கட்சியே திரும்பவும்வெற்றிபெறுமானல் என்ன நடக்குமென்பதை இந்தவேளை தமிழ்மக்கள் நன்கு சிந்திக்கவேண்டும். அடுத்த பொதுத்தேர்தல் தமிழ்மக்களுக்கு ஓர் கடுஞ்சோதனைகாலம். அதனல் பஞ்சதந்திரத்தில்சொல்லியிருப்பதுபோன்று பசித்தவன் விசுவாசத்தில நம்பிக்கைவையாது, விஷமப் பிரசாரங்களுக்குச் செவிசாய்க்காது மதியூகமாக நடந்துகொள்வதே மிகநன்று.

---

## பெரோனின் விழுகை

ஜேர்மனியிலே ஹிற்லரையும், இத்தாலியிலே முசோலினியையும்போன்று ஆர்ஜென்ரீனவிலே சர்வாதிகார ஆட்சிநடாத்திப் பிறிமேசன்கள், கம்யூனிஸ்தர்கள்முதலாம் வேதவிரோதிகளின் துன்மதிகேட்டுக் கத்தோலிக்கதிருச்சபையை விரோதித்து, வேதவிரோதசட்டங்களாலே அதற்குப் பலவிதஇடுக்கண்கள் விளைத்து, குருமார்,மேற்றிராணிமாரைப் பிடித்துச் சிறைவைத்தும், நாடுகடத்தியும் பலவிதநட்டணைகளைக் கடந்தசிலவருடகாலமாகச்செய்துவந்த ஜனதிபதி ஜெனறல் ஜுவான் பெரோனின் ஆட்சியும் கடைசியாகச் சென்ற திங்கட்கிழமை வீழ்ச்சியடையலாயிற்று. தமது ஆட்சியை எதிர்த்து நான்குதினங்களாகக் கலகம்நடத்திய படைகள் முன் எதிர்நிற்கவாற்ருது அவர் தமது மாளிகையிலிருந்து வெளியேறிப்பிறநாடுஒன்றுக்குக் காற்றுகப்பறந்து செல்லுகின்ருர். "கேடுவரும்பின்னே, மதிகெட்டு வரும்முன்னே."

---

### தென்னிந்தியாவின்
## சின்ன ஜெருசலேம்

இந்தியாவில் திருச்சிலுவைக்கெனக் கட்டப்பட்டிருக்கும் கோவில்களில் மிகப்பிரசித்தமானது, இந்தியாவின் தென்கோடியிலே மணப்பாட்டிக்குன்றின்மீது கட்டப்பட்டிருககும் திருச்சிலுவைக் கோவிலாகும். 1540-ம் ஆண்டு இந்துமகாசமுத்திரத்தில் பிரயாணஞ்செய்துகொண்டிருந்த கப்பல்ஒன்று பக்கத்துக்கரையிலுள்ள கற்பாறையிலே மோதியுடைந்து நாசமாகப்போகும் கஷ்டநிலையிலிருக்கும்போது திருச்சிலுவையின்மேல் பக்தியுள்ள அக்கப்பற்தலைவன் கப்பலைத திருச்சிலுவையின் அடைக்கலத்தில் ஒப்படைத்தான். மேலும், அந்தக்கப்பல் அடையுமிடத்திலே தனது கப்பலின் பாய்மரங்கொண்டு ஒருசிலுவைசெய்து அக்கரையில் நாட்டுவதாகவும் நேர்ந்துகொண்டான். கடைசியாக அந்தக்கப்பல் மணப்பாட்டுக் கடற்கரையை அடைந்தது. கப்பற்தலைவன் உடனே திருச்சிலுவைக்கு நன்றிசெலுத்தித் தான் நேர்த்திசெய்துகொண்டதுபோல் ஓர்சிலுவைசெய்வதற்கென்று தனது கப்பலின் பாய்மரத்தைக் கரையில்போட்டுச் சிலுவைசெய்து கரையிலிருந்த குன்றின்மீதுநாட்டி அதன்பக்கத்தில் ஒருகுடிசையுங் கட்டினான். பின்னர் அக்குடிசையிருந்த இடத்திலே ஓர் அலங்காரமானகோயில் கட்டப்பட்டது.

1542-ம் ஆண்டு அர்ச். பிரான்சிஸ் சவேரியார் மணப்பாட்டில் தங்கினர். அவர்காலத்திலேயே சிறியதாகக் கட்டப்பட்டுத் "திருச்சிலுவை ஆச்சிரமம்" என அக்கோவில் அழைக்கப்பட்டதெனத் தெரியவருகிறது. பிற்காலத்திலே 1581-ம் ஆண்டு அது பிரசித்திபெற்ற தேவாலயமாக யேசுசபைக் குருமாரின் முயற்சியால் பணம்திரட்டி அப்பணத்தைக்கொண்டு கட்டப்பட்டது. கப்பற்தலைவனல் நாட்டப்பட்டசிலுவையை இன்றைக்கும் பலிபீடத்திற்குப்பின்னல் பார்க்கலாம்.

திருச்சிலுவைக்கோவில் கட்டப்பட்டிருக்கும்மலை கெட்டியான பாறைக்கல்லாலாகி, ஆங்காங்கே மணலால்மூடப்பட்டு, இருபக்கங்களிலும் கடல்சூழ வெகுதூரம் கிழ்மேலாய்ச் செல்லுகிறது. இம்முகாந்திரங்களைக்கொண்டுதான் அக்காலத்தில் மணப்பாட்டைத் தரிசிக்கவந்த மேல்நாட்டுக் குருமார் 'சின்ன ஜெருசலேம்' என்று அதற்கு நாமஞ்சூட்டினர்கள். இந்தக்கோவிலுக்குத் திருயாத்திரையாய் ஏராளமான விசுவாசிகள்—விசேஷமாய்ப் புரட்டாசி மாதம் 4-ந் திகதி கொடியேறிப் 14-ந் திகதிவரையில் கொண்டாடப்படும் திருவிழாக்காலத்தில் வந்து ஞானப்பலன் அடைந்து போகிறுர்கள்என்பது குறிப்பிடத்தக்கது.

1583-ம் ஆண்டு பதின்மூன்றும் கிறகோரியார்எனும் பாப்பானவர் யேசுக்கிறீஸ்துநாதர் நம்மைப் பிசாசின் அடிமைத்தனத்தினின்று மீட்டு இரட்சித்த மெய்யான திருச்சிலுவையிலிருந்து வெட்டப்பட்ட பெரிய துண்டு ஒன்றை அக்காலம் ரோமாபுரியில் யேசுசபைக் குருமாருக்கு அதிசிரேஷ்டராயிருந்த வண. கிளாவ்டியூஸ் ஆக்குவாவீவா சுவாமியார்வழியாய் அக்காலத்திலே மணப்பாட்டில் விசாரணைக்குரவராயிருந்த வண. ஜோண தெசலாநோவா என்னும் யேசுசபைக்குருவானவருக்கு அனுப்பிவைத்தார். இந்த அருளிக்கமானது அவ்வருடம் புரட்டாசிமாதம் 14 ந் திகதியன்று திருச்சிலுவை உயர்த்தப்பட்ட திருநாளன்று பிரசித்தமாகக் கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டுச் சற்றுப்பிரகாரமாகக் கொண்டுசெல்லும்வழக்கம் அக்காலத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இவ்வருடம் திருச்சிலுவைக் கோவிலுக்கு வரும்யாத்திரிகர்களுக்கு ஓர்விசேஷ வருடம்எனலாம். அதாவது திருச்சிலுவைக் கோவிலில் பிரதிட்டைசெய்யப்பட்டிருக்கும் நமது திவ்விய கர்த்தருடைய பாடுபட்டசுரூபம் வந்த நான்காம் நூற்றுண்டு விழா இவ்வருடம்கொண்டாடப்படலாயிற்று.

---

✻ உலகில் அதிகம் விஸ்தீரணமான சமுத்திரம் எது?

பசிபிக்சமுத்திரமே. இது 6,39,86,000 சதுரமைல் விஸ்தீரணமுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யோசேவாஸ்முனிவர் சரித்திரத்துணுக்குகள்

### 6. மட்டக்களப்பில் நிகழ்ந்த சில சம்பவங்கள்

ஆசாரத்துக்குரிய யோசேவாஸ்சுவாமியவர்கள் மரணம் அடைந்த இரண்டாம் நூற்றாண்டு வந்தபோது (16-1-1911) இலங்கையின் பலபாகங்களிலும் ஒருபுதியவிழிப்புக் காணப்பட்டது. முக்கியமான கத்தோலிக்க மத்தியதானங்கள் எல்லாவற்றிலும் இந்நினைவுவிழா சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும், கண்டிநகரிலும் மாத்திரமல்ல, மட்டக்களப்பிலும் இவ்விழா பேராரவாரத்துடன் நடந்ததென்பதை நாம் 44 வருடங்களுக்குமுன்பு பத்திரிகைகளில் வெளிவந்த குறிப்புகளைக் கொண்டு தீர்மானிக்கக் கூடியதாயிருக்கின்றது.

"மாலை ஆராதனை முடிவுற்றதும், செபமாலையுடனும், தேவதோத்திரப் பாடல்களுடனும் இரண்டாயிரத்துக்குமேற்பட்ட பக்தர்வெள்ளம் சுற்றுப்பிரகாரமாய்த் தாண்டவன்வெளியை நோக்கி நடந்தது. தெருவீதிகள் தீபாலங்காரஞ் செய்யப்பட்டிருந்தன. ஆலயத்தின் உள்ளும் புறமுமாய்வந்து தேங்கியிருந்த சனங்களுக்கு யோசேவாஸ்முனிவரைப்பற்றி வண. H. வியூறி, S. J. சுவாமியவர்கள் சுருக்கமான ஓர்சொல் விருந்தளித்தார். ஈற்றில் அங்குள்ள அதிசயத்துக்குரிய மாதாவின் சுரூபத்தால் அனைவரும் ஆசீர்வதிக்கப்பட்டனர். இந்த அற்புதமான சுரூபம் கோயில்எரிந்தபோது அதிசயமாகக் காப்பாற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதுசம்பவித்த சிலகாலத்தால் யோசேவாஸ் சுவாமியார் அவ்விடத்துக்கு வந்தபோது அந்த அற்புத சுரூபத்தைஎடுத்து, அதை மட்டக்களப்பிலுள்ள தமது சிற்றாலயத்தில் அதிபூச்சிய பயபக்தியுடன் காப்பாற்றி வந்தார்." (க. மெ. பத். 24-1-1911)

தாண்டவன் வெளியிலுள்ள கத்தோலிக்கஆலயமே மட்டக்களப்பிலுள்ள கத்தோலிக்க ஆலயங்களில் மிகப்பழையதாகும். இது 1624-ம் ஆண்டளவில் கட்டப்பட்டது திருச்சபையின் எதிரிகளால் இக்கோவில் தீக்கிரையாக்கப்பட்டது. கோவில் சுவாலைவிட்டெரியும்போது மாதாசுரூபம் அதிசயமாய்க் காப்பாற்றப்பட்டதென்றும், பிறசமயப்பெண்ணொருத்தி மாதாசுரூபம் இருக்கும மறைவிடத்தைத் தேவதாயார் தம்திருவாயாலே கனவில்சொல்லக் கேட்டாளென்றும் பரம்பரையாக ஒருவரலாறு கூறப்பட்டுவருகின்றது. சுரூபத்தின்பாதத்தில் எரிந்தஅடையாளம் காணப்படுகிறது.

எது எப்படியாயினும் மட்டக்களப்புமக்கள் இந்தமாதா சுரூபத்தைப் பூச்சியமாகப் பேணி வருகிறார்கள் என்பது மறுக்க முடியாததாகும். இந்தச்சுரூபம் அற்புதமான சித்திரவேலைப்பாடுகள் அமையுமாறு செதுக்கப்பட்டதன்று. சாதாரண வேலைப்பாடமைந்ததாகவே காணப்படுகிறது. எந்நாளும் பூரண ஆடைஅணிகளால் இச்சுரூபம் அலங்கரிக்கப்பட்டுத் தோன்றுவதால் அதன்முகச்சாயலையன்றி வேறெவற்றையும் நாம்காண்பது அரிதாகும். ஆயினும், நாம்ஆராய்ந்தால் தாயாரின் வலக்கையில் செபமாலையையும், இடக்கையில் திருப்பாலனையும் காணலாம். தேவபாலனின் இடக்கை பூகோளத்தைத் தாங்க, வலக்கை ஆசீர்வதிக்கும் பாவனையில் அமைந்திருக்கிறது. தாண்டவன்வெளியில் எரியூட்டப்பட்ட ஆலயம் நாற்பது ஆண்டுகளுக்குள் மீளவும்கட்டப்பட்டதெனச் சரித்திரசான்றுகளால் அறிகிறோம். யோசேவாஸ் சுவாமியார்காலத்தில் இக்கோவில் இருந்ததென்பது நிச்சயமாகும்.

இலங்கைத்தீவின் கிழக்குக் கரையில் சிதறுண்டுகிடந்த கத்தோலிக்கருக்கு ஞானச்சீவியத்தை அளிக்கும்பொருட்டு மட்டக்களப்பு, புளியந்தீவு, திரிகோணமலை, கொட்டியாரம் முதலிய இடங்களை அவர் தரிசித்தார். 1693-ம் 1696-ம் ஆண்டுகளுக்கு இடையில் அவர் அவ்விடங்களில் வசித்தார். (சுவாமி S. G. பெரேரா எழுதியசரித்திரம் 115-ம்பக்.) ஆயினும் அவருடைய வரலாறுகளைப்பற்றி எழுதப்பட்டிருப்பவையோ மிகவும் சில்வாகும். பரம்பரைக்கதைகளோ மிகப் பலவாகும்.

வாஸ்சுவாமியார் முதலில் ஒரு யாசகனைப்போல யாழ்ப்பாணத்திலிருந்துவந்தார். அங்கோரிடத்தில் கத்தோலிக்கர் கூட்டமாயிருந்து செபமாலைசொல்லக் கண்ட சுவாமியார் தமதுமாறுவேஷத்தை மாற்றிக்கொண்டு அவர்களுக்குத் தம்மைத்தெரியப்படுத்தினர்.

யோசேவாஸ் சுவாமியாரை ஒரு வம்மிமரத்தில் கட்டி, அவருடையசமய விரோதிகள் அவருக்குச் சவுக்குகளால் அடித்தார்கள். இப்பொழுதுகூடச் சனங்கள் அந்தக்குறித்த இடத்தைக்காட்டி அதனை மகிமைப்படுத்துகிறார்கள். பிறசமயத்தவர்ஒருவரால் அந்தமரம்வெட்டி வீழ்த்தப்பட்டது. அவருடைய பிற்சந்ததியார் இதற்குச் சாட்சிகளாய் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பில் வழங்கிவரும் சிலசம்பவங்கள் ஏனைய இடத்துச் சரித்திரங்களோடு கலந்து காணப்படுகின்றன. 250 ஆண்டுகளின்பின் இப்படி நடப்பது ஆச்சரியமான சம்பவமன்று. ஆயினும், இப்பகுதிக்கத்தோலிக்கர் யோசேவாஸ்சுவாமியாருடைய ஒப்பற்ற பரிசுத்ததனத்தையும், புண்ணிய கைங்கரியங்களையும் வழிவழியாகப்பாராட்டி வருகின்றார்கள். இவற்றை வண. எவ். ஓ. தம்பிமுத்துசுவாமியார் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

— அழது

---

● பிரித்தானியிலே அணுச்சக்திகொண்டு இயங்கும் ஓர்நவீன கடிகாரத்தைப் பிரித்தானிய ஆராய்ச்சிச்சாலையொன்று கண்டுபிடித்துச் செய்திருக்கிறது. இந்தக்கடிகாரம் அதிகம் சரியா நேரங்காட்டுகின்றதாம். ரூஷியாவும் அணுச்சக்தியால் இயங்கும் அதேமாதிரியான கடிகாரம் ஒன்றைச் செய்திருக்கிறது.

# கொழும்பு அதிமேற்றிராணியாரும் பௌத்தசமய குருதலைவரும்

இலங்கையிலே கத்தோலிக்கசமயத்தின் தலைவரான அதிமேற்றிராணியாண்டவர் அவர்களும், பௌத்தசமயத்தலைவரான பிரதமகுரு மகாநாயக தேரோ அவர்களும் சமீபத்திலே கண்டியிலுள்ள மல்வத்தவிகாரையிலே சிநேகபாண்மையுடன் சந்தித்துச் சம்பாஷணை நடத்தியது சரித்திரத்திலே சுவைமிக்க அரியசந்தர்ப்பங்களில் ஒன்றாகும். மகாமேன், தோமஸ்கூறே ஆண்டவர் அவர்கள் தபால்மந்திரியாரின் நிரந்தரகாரியதரிசி திரு. வான்லங்கம்பேர்க், கண்டி அரசாங்க தலைவர் திரு. டி. ஜி. எல். மிஸ்ஸோ ஆகியோருடன் பிரதமகுருவைச் சந்திக்கச்சென்றனர். மல்வத்தை விகாரையிலே பிரதமகுருவான மகாநாயக தேரோ அவர்கள் பௌத்த குரவர்சங்க அங்கத்தவர்கள் சமேதராய் அதிமேற்றிராணியாரை வரவேற்றார். அதிமேற்றிராணியார் மேனாட்டுமுறையில் பிரதமகுருவுக்குத் தலைகுனிந்து நமஸ்காரஞ்செய்தனர். பிரதமகுரு தாம்வழமையாக உட்காரும் ஆசனத்திலேயே அதிமேற்றிராணியாரை அமரச்செய்தார்.

நீடியசம்பாஷணையின்போது கத்தோலிக்கர், புத்தர்ஆகிய இருசமயத்தவர்களிடையேயும் அநுதாபமான விளக்கமும், பரஸ்பர உறவும் நிலவ வேண்டியதன் அவசியத்தை அதிமேற்றிராணியார் சுட்டிக்காட்டினர். சிங்களமக்கள்எல்லோரும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவவேண்டுமென்னும் அபிப்பிராயம் தவறானதென்றும், தாமே ஒருசிங்களமகனென்றும், வேறு சமயத்தைக் கைக்கொண்டபோதிலும் தேசாபிமானத்திலே தாம்குறைந்தவரல்லவென்றும் தெரிவித்தார்.

கத்தோலிக்கர், புத்தர் ஆகியோருக்கிடையேயுள்ள அமைதியைக் குலைக்கும் நோக்கத்துடன் பொய்ப்பிரசாரம் நடைபெறுகிறதெனக்கூறி, அதற்கு உதாரணமாகக் கத்தோலிக்கதிருச்சபையானது புத்தஜயந்திக்கு முன்னர் இலங்கையிலே 2,500 கோவில்கள் கட்ட நடவடிக்கை எடுக்கிறதென்னும் பிரசாரத்தை எடுத்துக்காட்டினர்.

புத்தசமயத்தை ஒழித்துக்கட்டுவதற்கென "ராபாசா நிக்யா" எனும்இயக்கத்தைக் கிறீஸ்துவ சபையொன்று ஆரம்பித்துள்ளதென்றும், அதற்குஒரு லட்சம்ரூபாநிதி உதவியுள்ளதென்றும் உலவும்வதந்தி பொய்யான வதந்திஎன்றும் உறுதிசெய்தார்.

இப்படியான பிரசாரங்களெல்லாம் மார்க்ஸியபொதவுடைமைப் பிரசாரங்களேயென்றும் இவைகள் கத்தோலிக்க, புத்தசமயப் பிளவைஉண்டாக்கி அதில் வேட்டையாட விரும்புவோரின் விளையாட்டுகளென்றும் விளக்கினர்.

இத்தொடர்பிலே அதிமேற்றிராணியார் தவளைக்கும், சுண்டெலிக்குமிடையே ஏற்பட்டிருந்த சிநேகத்தை இராசாளிஒன்று தனதுசூழ்ச்சியால் எப்படிக்குலைத்து, ஈற்றில் தவளையையும், சுண்டெலியையும் விழுங்கிவிட்டதென்னும் பழங்கதையை ரசமாக எடுத்துக்கூறினர். அவ்வேளை அங்கு சமுகமாயிருந்த புத்தகுருமார் அனைவரும் அதிமேற்றிராணியாரின் அபிப்பிராயங்களை ஆதரித்தனர்.

பாப்பாசரின் குருமடத்திற்கு அண்மையிலுள்ள ஒரு புத்தஆலயத்தை அதிமேற்றிராணியார் ஒருமுறை சந்திக்கநேர்ந்தது. அந்த ஆலயத்தின் சுவர்கள் தாழ்ந்துபோகும் நிலையில் இருந்தன. அதிமேற்றிராணியார் தமது வெள்ளிக்கடிகாரத்தை எடுத்து அதன் சங்கிலியில் பிடித்துக்கொண்டு அதைக்கீழே தொங்கவிட்டார். தொங்கவிட்டு மற்றவர்களுக்குக் கேட்காதபடி ஏதோமந்திரஞ்சொன்னார். சிறிதுநேரத்துள் அந்தஆலயத்தின்கீழே 27 அடிதூரத்தில் ஒருநிலஊற்று ஓடுகிறதென்று அவரைச்சூழ்ந்துநின்ற புத்தகுருக்களுக்குச் சொன்னார். இந்தச் சம்பவத்தையும் அதிமேற்றிராணியாரே கூறினார்.

சம்பாஷணையின் பின்னர் பிரதமகுருவும், மற்றோரும் அதிமேற்றிராணியாரை விகாரையுடன் அண்டியிருந்த சங்கராஜா நூதனசாலைக்கு அழைத்துச்சென்றனர். அங்கே அவருக்குத் தரிசகர்பதிவுபுத்தகத்தைப் பிரதமகுருவே கொடுத்தார். "பிரதமகுருவே அதிஉற்சாகத்துடன் நூதனசாலையை நமக்குச் சுற்றிக்காண்பித்தனர்; இச்சந்திப்பு லங்காமாதாவின் புத்திரர்எல்லோருக்கிடையேயும் நல்விளக்கத்தையும், ஒற்றுமையையும் பலப்படுத்துவதாக" என்று அதில் அதிமேற்றிராணியார் பதிவுசெய்துள்ளார்.

பௌத்தகுரவர் சங்கத்தின் சார்பிலும், பிரதமகுருவின்பேராலும் விமலஞான தேரோ அவர்கள் பேசுகையில்: மகாநாயக தேரோவைச் சந்திக்க அதிமேற்றிராணியார் வந்ததையிட்டுத் தங்கள்மகிழ்ச்சியைத் தெரிவித்தார். "சமயமானது ஒவ்வொருவரதும் தனிப்பட்ட சொந்தவிவகாரமாயிருப்பதால் சமயவித்தியாசம் சமூகவிரோதத்திற்குக் காலாயிருந்து சமூகசமாதானத்தைக் குழப்பக்கூடாதுஎன்றும், ஒவ்வொருசமயதலைவரும் சமூகமுன்னேற்றத்தைவளர்க்கவே முனைந்தனரென்றும், ஒவ்வொருசமயத்தவரும் தத்தம் சமயத்தவரின் முன்னேற்றத்தைக் கருதினால் முழுச்சாகியமுமே முன்னேற்றமடையும்" என்றும் கூறினார்.

---

● எகிப்துதேச கெய்றோநகரிலே சென்றசனிக்கிழமை திடீரென உண்டான ஒரேயொரு நிமிஷப் பூகம்பத்தாலே பன்னிருபாடசாலைகள் அடித்துக்கொண்டுவிழ, அதனால் 18 பிள்ளைகள் இறந்தார்களென்றும், 60 பிள்ளைகளுக்குமேல் காயமடைந்தார்களென்றும் செய்திகிடைத்திருக்கிறது. கடந்த 30 வருடகாலத்திலே இவ்வளவு மோசமான பூகம்பம் ஆங்கு ஏற்படவில்லையாம்.

● அமெரிக்கமக்கள் அதிகம்உயரமாக வளர்ந்துகொண்டு வருகிறார்களாம். அதனால் அவர்களின்படுக்கைகள் நீண்டனவாய்ச் செய்யப்படவிருக்கின்றன. முதலாவது உலகயுத்தமுதல் ஆறு அடியும், அதற்கு மேற்பட்டதுமான உயரமுள்ள அமெரிக்க ஆடவர்களின்தொகை நூற்றுக்கு 70 விகிதம் அதிகரித்திருப்பதாகப் படுக்கைகள் செய்கிற ஐக்கிய அமெரிக்க தேசியசங்கத்தின்தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

---

வெளிவந்துள்ளது!

## அப்போஸ்தலருடைய நடபடிகள்

J. S. C (N. P. T. A.) வகுப்புப் பரீட்சைக்கான இப்பாடபுத்தகம் தற்போது புதியபதிப்பில் வெளிவந்துள்ளது.

விலை: ரூபா 1-00
தபாற்செலவு: சதம் 12

கிடைக்குமிடம்:—
மனேஜர்,
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

சகோதரிகளான இருகிழவிகள் ஓர் பலசரக்குக்கடை நடத்தி வந்தார்கள். ஓர்நாள் அந்திவேளையில் கள்வன்ஒருவன் கையிற் துப்பாக்கியுடன் அக்கடைக்குட் புகுந்தான். அவ்விரு கிழவிகளையும் வெருட்டி, அவர்கள் வைத்திருக்கும் பணமெல்லாவற்றையும் கொடுக்கும்படி கேட்டான்.

ஒருகிழவி திருடனைக் கெஞ்சினாள்: "என் தங்கை இருதயப் பலவீனமுள்ளவள். பணமெல்லாவற்றையும் இழந்துபோவதை அறிந்தால் அவள் இறந்துவிடக் கூடும்" என்றாள்.

பெண்ணென்றால் பேயும் இரங்குமல்லவா? அவனிடம் ஏதோ துரும்பளவாவது மேன்மையான குணமிருக்கும் என்று அவள் எண்ணினாள்.

திருடன் மனமிளகி, மன்னிப்புக் கேட்டுவிட்டு வெளியேறினான்.

கறுமிய மனங்களைத் திறக்கும் தாழ்க்கோல் தயவுஎன்பதை அக்கிழவி அறிந்திருந்தாள். அத்திருடனிடமும் அற்பமாவது தயவுஇருக்கும் என்றுஎண்ணி அவனுடன் அன்பாய்ப் பேசியிராவிட்டால் அநேகநாட்களாக அவர்கள் பாடுபட்டு உழைத்த பணம் முழுவதையும் பறிகொடுத்திருப்பாள்.

பிறமனிதருடன் தயவுதாட்சணியமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று யேசு தமது சீஷருக்கு எப்போதும் சொல்லிவருவார். புளிக்காடியைவிடத் தேன்கொண்டு அதிகஈக்களைப் பிடிக்கலாமென்றது உண்மையே.

"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உங்கள் சத்துராதிகளை நேசியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்; மன்றாடுங்கள்" (மத். 5 : 44) என்பது யேசுவின் போதனை.

உங்கள் அன்புள்ள
அண்ணா.

## மலர்கிறது

("ஜெயம்')

ஆதவனைக் கண்டவுடன் அவனி மலர்கிறது
அம்புலியைக் கண்டவுடன் ஆம்பல் மலர்கிறது
பூதலத்திற் கல்வியினால் புத்தி மலர்கிறது
பொறுமையினால் பெருமையோடு புகழும் மலர்கிறது.

உண்மைதனைக் கண்டவுடன் உள்ளம் மலர்கிறது
ஊக்கமதைக் காண்பதனால் உயர்வு மலர்கிறது
வண்மைஒளி வீசுவதால் வாழ்வு மலர்கிறது
வஞ்சகம்போய் சுயநலத்தால் வறுமை மலர்கிறது.

இனியதமிழ் பயில்வதனால் இன்பம் மலர்கிறது
ஏழ்மைதனைப் போக்குவதால் இதயம் மலர்கிறது.
தனிமையினால் மௌனமோடு அமைதி மலர்கிறது
தாழ்மையிலே ஞானமெனுந் தங்கம் மலர்கிறது.

உழவனது ஏர்முனையால் உலகம் மலர்கிறது
உலகினிலே ஆசையினால் கவலை மலர்கிறது
மழைபொழியக் காண்பதனால் பயிரும் மலர்கிறது
மனமடையும் திருப்தியினால் மகிழ்ச்சி மலர்கிறது.

## பெந்தெக்கோஸ்துவின் பின் 17-ம் ஞாயிறு

### நிருபம், எபே. 4 : 1-6

எபேசியருக்கும், மற்றுங் கிறீஸ்துவர்களுக்கும் சுவிசேஷத்தைப் போதித்ததின் நிமித்தம் சம்பாவிலு கைதியானார். கைதியானாலும் அவர் போதியாமல் விட்டவரல்ல. இந்நிருபத்திலே "உங்கள் அழைத்தலுக்கு ஏற்க நடவுங்கள்" என்று எபேசியரை அவர் எச்சரிக்கிறார். உயிரற்ற, உணர்வற்ற பொய்த்தெய்வங்களை ஆராதித்து வந்தவர்களைச் சர்வேசுரன் தமது மக்களாகவும், கிறீஸ்துவின் சகோதரராகவும், மோட்சசுதந்திரராகவும் ஞானஸ்நானத்தால் ஆக்கிவிட்டார். சர்வவல்லப பிதாவைப்போல் அர்ச்சியசிட்டராகும்படி அவர்கள் அழைப்புப் பெற்றிருக்கிறார்கள். சர்வேசுரனுடைய பிள்ளைகளாகவே நடக்க வேண்டும். கனத்தைக் கனமறியும்.

தாழ்ச்சி, சாந்தத்துடன் பிறர்செய்யும் அவமானத்தைப் பொறுமையுடன் சகித்துப் பிறர்சிநேகத்துக்காக ஒருவரொருவருடைய பாரங்களைச் சுமக்கும்படி ஏவுகிறார். ஏன்? சமாதானத்தைக் காத்துவருதல் சிந்தையிலும், மனதிலும் ஒற்றுமையை—நெருங்கிய பந்தனத்தை உண்டாக்கும் சங்கிலி.

இந்த ஒற்றுமைக்குக் காரணங்கள் பல. ஒரே ஞானச் சரீரத்துக்குச் சேர்ந்தவர்கள்; ஒரே பரிசுத்த ஆவியினால் தூண்டப்படுகிறார்கள்; ஒரே கதியாகிய மோட்ச பேரின்பத்தையடைய நம்பியிருக்கிறவர்கள். ஒரே ஆண்டவர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம்.

"ஒரே சருவேசுரனும் எல்லோருடைய பிதாவும்" என்றும் கூறும் பொழுது பரிசுத்த திரித்துவத்தையே குறிக்கிறார். "எல்லோருக்கும் மேலாய்" என்பதால் எல்லாத்துக்கும் ஆதிகாரணரும், சகலத்தையும் ஆண்டு நடத்துகிறவருமான பிதாவைக்குறிக்கும். "எல்லோவற்றிலும்" எனும் பொழுது அவர்மூலமாய்ச் சகலமும் உண்டாக்கப் பட்டதென்று குறிக்கப்படும் சுதனைக் கருதும். "நம்மெல்லோருக்குள்ளும்" என்பது பரிசுத்த ஆவியைக் கருதும்.

ஒரேவிசுவாசம் என்னும் பொழுது கிறீஸ்துநாதருடைய சபையின் மக்கள் பல்வேறு முரண்பாடான விசுவாசங் கொண்டிருக்க முடியாதென்பது வெளிப்படை. எபேசியர் ஒரே சரீரத்துக்குச் சேர்ந்தவர்கள்; ஆகையால், ஒரேவிசுவாசங் கொண்டிருக்க வேண்டியது. விசுவாசத்தை மாற்றுகிறவர்கள் கிறீஸ்துவின்சபைக்குச் சேர்ந்தவர்களல்ல. உண்மைச்சபையின் விசுவாசத்தை இழந்தவர்கள். சிந்தையிலும், இருதயத்திலும் ஒற்றுமைவிளங்கவேண்டுமாயின் விசுவாச ஒற்றுமையிருக்கவேண்டும். ஞானஸ்நான ஒற்றுமை யிருந்தால் போதாதா? ஞானஸ்நானத்தை விசுவாசத்துடன் ஒப்பிட முடியாது. விசுவாசம் சத்தியங்களைச் சார்ந்தது. ஞானஸ்நானத்துக்கு அவசியமா யிருக்கவேண்டிய அம்சங்கள் இருந்தாலும் விசுவாசசத்தியங்களில் வேற்றுமையிருந்தால் அவர்கள் கிறீஸ்துவின் உண்மைச்சபைக்குச் சேர்ந்தவர்களல்ல.

மறுக்கப்படுஞ்சத்தியம் அத்திவாரச் சத்தியமாயிருந்தாலும் அல்லாவிடினும் வேதபேதகம் பேதகமே; மறுப்பு மறுப்புத்தான். ஏனெனில், அப்போஸ்தலர் ஆசிக்கும் "மன ஒற்றுமைக்கு" மாறு.

— சர்வேசுரனுக்குத் தோத்திரம்

## வெண்ணிலா

நிலாவே! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய். உன்னைப் பார்க்கப் பார்க்க எவ்வளவு சந்தோஷமாய் இருக்கிறது. வானத்திலே வெள்ளிப் பந்துபோல நீ காட்சி யளிக்கிறாய். வெண்ணிலாவே நீ எங்களோடு விளையாட வரமாட்டாயா? பகலெல்லாம் எங்கே போய்ப் பதுங்கி இருந்தாய்?

எங்கள் அம்மா உன்னைக் காட்டிக் காட்டித்தானே எங்களுக்கு உணவூட்டினா. நீ இல்லாவிட்டால் நாங்கள் பட்டினிதானே கிடந் திருப்போம். வெண்ணிலாவே! நீ வராவிட்டால் நாங்கள் இரவிலே பயந்து வெளியே வரமாட்டோம். வெள்ளை வெளேரென்று ஒளிவீசும் பால்நிலவே! உன்னுடைய வெளிச்சத்தைக் கண்டுவிட்டால் குஞ்சுக் கமலா, ரஞ்சித அக்கா, குட்டித்தம்பி எல்லோரும் வீட்டு முற்றத்திலே குதித்து விளையாடுவோம். "அம்புலி மானே அழகழ சொக்கா எங்கெங்கு போறாய்" என்று பாடிப் பாடி ஆடுவோமே. நிலாவே! உன் வெளிச்சத்தில் கமக்காரர் தங்கள் வேலைகளையெல்லாம் செய்கிறார்கள். எங்கள் அப்பாகூட நேற்று உன்னுடைய வெளிச்சத்தில் தோட்டத்திற்கு இறைக்கப் போனார்.

நிலா வெளிச்சத்தில் வட்டமாக இருக்க, எங்கள் பாட்டி எத்தனையோ பல இனிய கதைகளெல்லாம் சொல்வா. நாங்கள் சந்தோஷமாகக்கேட்டுக் கொண்டிருப்போம். நிலாவைக்காட்டி எங்கள் பாட்டி அதில் ஔவையார் இருக்கிறார் என்று காட்டினா. நாங்களும் அண்ணாந்து பார்த்தோம். அதில் ஒருகிழவி குனிந்து கொண்டு நிற்பது போலத்தான் தெரிகிறது.

உங்களுக்கும் ஔவைப் பாட்டியையும், வெண்ணிலாவையும் பார்க்க ஆசையில்லையா? நீங்களும் அண்ணாந்து பாருங்கள். எனக்கும் வெண்ணிலா என்றால் ஒரேஆசைதான்.

S. V.

## சிந்தனைச் சுடர்

வைகறைப் போதினிலே—விடிவெள்ளி
வானில் துலங்குகையில்
தெய்வமரி நினைவாம்—மகிழ்ச்சியில்
தேகஞ் சிலிர்க்குதடி

●

ஆதவன் மேலெழவே—கதிரொளி
அள்ளி யெறிகையிலே
சோதிநிறை மரியாள்—அணியின்
சுந்தரம் தோன்றுதடி

●

மாலைப் பொழுதினிலே—மலர்ந்திடும்
மாணிக்கப் பொன்நிலவில்
ஞாலத் திருமரியாள்—மலரடி
ஞாபகம் ஓங்குதடி

●

கங்குல் வருகையிலே—தாரகைக்
கற்கள் மினுங்குகையில்
துங்கமரி புனைமீன்—மகுடம்
தோன்றிடக் காண்பேனடி

ஆசிரியர், F. S. C.

---

❋ பர்மாவில் எத்தனைபாஷைகள் பேசப்படுகின்றன?

சுமார் 135 பாஷைகள் பேசப்படுகின்றன.

❋ இந்தியாவிலே எல்லாமாக எத்தனை றெயில்வே ஸ்றேஷன்கள் இருக்கின்றன?

72,000 ஸ்றேஷன்கள் வரையிலே இருக்கின்றன.

❋ இங்கிலாந்துதேசத்தை இதுவரை எல்லாமாக எத்தனை மகாராணிகள் ஆட்சிசெய்திருக்கின்றனர்?

தற்போதைய எலிசபேத் மகாராணியாரோடுசேர்த்து ஆறுபேர் ஆட்சிசெய்திருக்கின்றனர். (1) முதலாவது மேரி, (2) முதலாவது எலிசபேத், (3) இரண்டாவது மேரி, (4) ஆன், (5) விக்ரோறியாமகாராணி, (6) இரண்டாவது எலிசபேத்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சோகத்தின் இருப்பிடம்

— ச. ஸ்தனிஸ்லாஸ் —

நமது அருமைத்தாய் — அமல கன்னிகை நரர்உலகில் வாழ்ந்த பொழுது, அவள் அடைந்த வியாகுலங்களைப்பற்றித் திருச்சபை நமக்குஅடிக்கடி ஞாபகப்படுத்திக்கொண்டு வருகிறது. திவ்வியயேசுவின் திருப்பாடுகளைத் தபசுகாலத்தில் நாம்சிந்தித்துத் தியானிப்பதுபோல, அவருடையதிருமாதாவின் ஏழுவியாகுலங்களைத் திருப்பாடுகளின் வாரத்தில்வரும் 6-ம் வெள்ளிக்கிழமையன்றும், புரட்டாசிமாதமும் நாம் கண்முன்வைத்துத் தியானிக்கவேண்டுமெனத் திருச்சபைவிரும்புகின்றது.

மாதாவின் ஏழுவியாகுலங்களையும் நாம்ஒவ்வொன்ருகச் சிந்தனையிலிருத்தி அவள் அடைந்த துன்பதுயரங்களில் நாமும் பங்குகொள்ள வேண்டுமென்று திருமறை நமக்கு நினைவூட்டுகிறது. உமது ஆத்துமம் வியாகுலவாளால் ஊடுருவப்படுமென்று சிமியோன்மொழிந்த தீர்க்கதரிசனவசனம், பரிசுத்த திருக்குடும்பம் எகிப்துதேசத்திற்கு ஓடிப்போனசம்பவம், பன்னிரண்டுவயதில் யேசு ஜெருசலேம் தேவாலயத்தில் காணமற்போன சம்பவமாகிய இம்மூன்றும் மாதா தமதுமகன் பொருட்டு அடைந்த வியாகுலங்களாம். எஞ்சியுள்ள நான்கு வியாகுலங்களும் மாதா திருமைந்தனின் பாடுகளில் பங்கு பெற்றபோது ஏற்பட்டசம்பவங்களாகும்.

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட மாதரசி — சர்வேசுரனுடைய பரிசுத்தமாதா — தமதிரித்துவத்தின் அன்புக்குப் பாத்திரமான பரிசுத்தஆலயம் என்றெல்லாம் போற்றப்படுகின்ற நமதுஅன்னை அடைந்த மனோவியாகுலங்கள் அனந்தம். அவைகளை நாம்சிந்திக்கும் பொழுது, "அறக்கடவுளுக்கு அன்புக்காணிக்கையாகத் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் பளுவான சிலுவையைத் தோளில்தாங்கிக் கல்வாரிமட்டும் தூக்கிச்செல்ல வேண்டும்" என்ற அமுதவசனம் நம்சிந்தனைத்தெள்விற்குத் தெவிட்டாத திருஅமுதாகவந்து காட்சியளிக்கிறது.

மாதா ஏன் இவ்வாறு துன்பதுயரப்பட வேண்டும்என்னும் கேள்விக்கு வேதசாஸ்திரிகள் "மாதா தமதுதிருமைந்தன்மீது வைத்த அளவில்லாநேசமும், மக்கள்மேல் அவள்கொண்ட பாசமும் அவளுக்கு உபஇரட்சகிஎன்றபதவியை அளித்தன" என்று ஒருமுகமாகக் கூறுகின்றனர்.

யேசுபிறந்த நாற்பதாம்நாள் தேவாலயத்தில் சிமியோன் மொழிந்த துன்பவசனத்தைக் கேட்டதும் நமது அன்னை ஞான வெளிச்சத்தின் துணையைக் கொண்டு அந்தவசனத்தின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டாள். அவள் தமதுதிருமகனின் திருப்பாடுகளையும், ஆன்ம சரீர வாதைகளையும் ஏற்கனவே அறிந்திருந்தாள். ஆயினும், அவைகளை எல்லாம் அவள் பணிந்தமனதோடு ஏற்றுக் கொள்ள ஒருநிமிடமும் தயங்கவில்லை. இவைகளெல்லாம் மக்களின் இரட்சணியத்துக்கு அவசியம்என்பதை அவள் நன்கு உணர்ந்திருந்தாள். "உங்கள் ஆத்துமத்திற்காக மிகவும்சந்தோஷமாய் நான் என்னைச் செலவழிப்பேன்; நானே செலவழிக்கவும் படுவேன்" (கொரிந். 2 : 12–15) என்னும் அமுத வாக்கு அவள் இருதயத்தில் அர்ச். சின்னப்பர் சொல்லுவதற்கு முன்னதாகவே ஆழமாக அடங்கியிருந்தது.

பரலோகஅன்னை — பரமனின்தாய் — மக்கள்இரட்சணியத்திற்காக யேசுவின் பாடுகளில் பங்குகொண்ட நமது அன்னை யேசுவைப்போலச் சரீரத்தில் பாடுகள்படவில்லைஎனினும் அவள் மனதிலுண்டான துன்பவாதனைகளால் தனது மைந்தனின்வாதைகளை ஒன்றித்து அனுபவித்தாள்என்று சொல்லத்தேவைஇல்லை.

இகபரம்ஆள்பவனின் ஒப்பற்றதாய் தமது தாய்க்குரிய அன்புநிலையில் விசேஷவிதமாகத் தமதுதிருமைந்தனின் திருப்பாடுகளில் பங்குகொண்டாள். எவ்வாறுஅவள் பெத்லகேமிலும், எகிப்திலும்; நசரேத்திலும் தமதுநேசமைந்தனருகில் இருந்தாளோ, அவ்வாறே அவரது வீரமரணம் நிகழும்போது கபாலதலத்திலும் அவள் மகனின் அருகிலேயே இருந்தாள். கல்வாரியிலே ஆண்டவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் அந்தவேளையில் சோகத்தின் இருப்பிடமான மாதா சிலுவைஅடியில் நின்று கண்ணீர்வடித்துக் கொண்டிருக்கும் அந்தச்சோகக்காட்சியை நாம் காணும்பொழுது உண்மையிலே அவளுடைய மனதிலுண்டான கிலேசமும், அதைமேற்கொள்வதற்காக அவள்வருவித்துக் கொண்டதைரியமும் நமது இருதயங்களில் நல்லுணர்வைப் பிறப்பிக்கின்றன.

அறக்கடவுள் சிலுவையில் அறையுண்டு மரிப்பதற்குத் திருமாதா பூரண இசைவு அளித்தது மட்டுமல்ல, அவள் ஆண்டவரின் அன்னையாக ஆனதிலிருந்து ஒவ்வொருநிமிடமும் அவருடைய தியாகத்தையும், வீரமரணத்தையும் பரமபிதாவுக்குச் சுகந்த பரிமளம்வீசும் உந்தபலியாக ஒப்புக்கொடுத்தாள்.

பரமன் பாவிகளின்மீட்புக்காகப் பாரக்குருசில் அழுந்திக் கொண்டிருக்கும் அந்தவேளையில் மாதா மகனைப்பின்சென்று கடைசிவரையிலும் மகனைவிட்டுப்பிரியாது அருகிலேயேஇருந்தாள். சிலுவைசுமந்துசென்ற தமதுமகனை மாதா வழியில்சந்தித்து, கபாலதலத்தில் சிலுவையில் அறையப்படும் பொழுதும், சிலுவையில் தொங்கும்பொழுதும் அங்கேயிருந்து மக்கள் எல்லோரையும் தனதுபிள்ளைகளாக அவரிடமிருந்து ஏற்றுக் கொண்டு, கல்வாரிப்பலி முடியும்வரை சோகத்தின் இருப்பிடமாகச் சோகம்நிறைந்த உள்ளத்தோடு அங்கு நின்றுகொண்டிருந்தாள். என்னே அவளது தியாகம்! மனோவியாகுலம்!

மரித்தயேசுவின் திருவுடல் சிலுவையினின்றும் இறக்கப்பட்டு, மாதாவின் மடியில் வளர்த்தப்பட்ட காட்சியும், கடைசியாகக் கல்லறையில் அடக்கப்பட்டகாட்சியும் நமது உள்ளத்தை உருக்கும் சோகம் நிறைந்த சம்பவங்களாகும்.

நமது அன்னை அடைந்த ஏழு வியாகுலங்களை நாம்ஒவ்வொன்ருகத் தியானித்து, அவளுக்குப் பூரண நன்றிசெலுத்தி, அவளைத் தாய்மையின் சிகரமாக மதித்து நேசித்து அவளைப் போல் நாமும் தூயலீலியாய்த் துன்பம்நிறைந்த காலத்தும் சோர்வடையாமல், வெண்மையினும்பரிசுத்த கத்தோலிக்க வாழ்க்கை நடாத்தவும், நமது நாடு யேசுவை ஏற்றுக்கொள்ளும் நாடாக விரைவில்மாறவும் சோகத்தின் இருப்பிடமான நமதுஅன்னையை வேண்டிக் கொள்வோம்.

---

## புனிதவளன் கல்லூரிக்குஜே!

கடந்த வெள்ளிவாரம் காலைநேரம் காரிருளைக்கலைத்துக் கதிரவன் அநுராதபுரச் சாரணர்கரபந்தாட்ட மைதானத்தில் இளங்கதிர்களைப் பரப்பத் தொடங்கிற்று. காத்திருந்தநாள் வரக்கண்டதே மக்கள் அம்மைதானத்தை அண்மியவண்ண மிருந்தார்கள். அவ்வேளை தத்தம்பகுதிகளின் கரபந்தாட்டத்திறமையை மாகாணத் தலைநகரிற் காட்டுவான்நினைந்து மதவாச்சி, கெக்கிருவை, பொல்லநறுவை முதலாமிடங்களிலிருந்து வீரர் பலர் வந்து சேர்ந்தனர். அநுராதபுரம் புனிதவளன்கல்லூரி வீரரும் வந்துசேரவே மணி 9 ஆயிற்று. முதன்முதலாக மதவாச்சி, அரசினர் கனிஷ்டபாடசாலை மாணவருக்கும், புனிதவளன் கல்லூரி மாணவருக்குமிடையே போட்டிஆரம்பமாயது. பக்கத்துக்கு அறுவராகப் பன்னிருவர் விளையாடினர். இயன்றமட்டும் இருபகுதியும் முயன்றன. ஈற்றில் புனிதவளன்கல்லூரிக்கு இருஆட்டங்களும், மதவாச்சிப்பாடசாலைக்கு ஒருஆட்டமும் வெற்றிகள்கிடைத்தன.

இரண்டாவதாக, புனிதவளன் கல்லூரி பொல்லநறுவை, அரசினர்கல்லூரியுடன் போட்டியிட்டது. ஒவ்வொருமுறையும் பந்து நிலத்தில்விழ நீண்டநேரம் சென்றது. இறுதியில் பொல்லநறுவைவீரருக்கு ஒருவெற்றியுமே கிடையாதவாறு புனிதவளன்கல்லூரிமாணவர் இருஆட்டங்களிலும் தொடர்ந்து வெற்றிபெற்றனர்.

அதன்மேல் மூன்ருவது போட்டி ஆரம்பமானது. அநுராதபுர அரசினர் கல்லூரிவீரரைப் புனிதவளன் கல்லூரிவீரர் சந்தித்தனர். முதலாம் ஆட்டமே பாண்டவ கௌரவ முதல் நாட்போர் போன்றிருந்ததெனில் அதன்உக்கிரபோக்கை விளக்கவும் வேண்டுமா. புனிதவளன்வீரர் மத்திய கல்லூரிவீரரிடமிருந்து குண்டுபோன்றுவந்த ஒவ்வோர்அடியையும் வீரத்துடன்சமாளித்து யாவரும் அதிசயிக்குமாறு வெற்றியும் ஈட்டினர். ஆட்டங்கள் முடிந்தன. கொழும்புமாநகரில் இலங்கைப் பொதுப்போட்டியில் பங்குபற்றும் உரிமையும் புனிதவளன் கல்லூரிக்கு அளிக்கப்பட்டது. புனிதவளன் கல்லூரிக்கு ஜே!

— நிருபர்

---

## புலவர் வ. சூசைப்பிள்ளை அவர்களின் தேகவியோகம்

மாதையம்பதிவாசராய், தாதை சூசையப்பரின் அச்சகத்தில் அரைநூற்ருண்டளவாகக் கடமையாற்றி இற்றைக்குப் பத்தாண்டுகளின்முன் இளைப்பாறியவரும், வரகவியாகவிளங்கி "மதுரகவி"ப் புலவரென அறியப் பெற்றவரும், பலராலும் நன்கறியப் பட்டிருந்து காலஞ்சென்ற திரு. வ. ம. கோப்பையா அவர்களின் சகோதரருமான திரு. வ. சூசைப்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய்கண்டு அந்திய தேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன்பெற்று நிகழ்மதி 7-ந் திகதி புதன் கிழமைஇரவு 11 மணியளவில் மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்கு வயது 77.

தமதுபாவிலே மதுரம் பொழியும் புலவர் சூசைப்பிள்ளை அவர்கள் "இன்பகவி"ப்புலவராகவிளங்கியிருந்த பண்டிதர் எவ். ஜே. சுபவாக்கியம்பிள்ளை அவர்களிடமும், மற்றுஞ்சில பண்டிதர்களிடமும் யாப்பிலக்கணங்கற்று, வரகவியாகிய தம்மைப் புலமையிலே வளப்படுத்திக்கொண்டார். கருங்குயில் குன்றத்துக்கொலை எனும் நாடகம், எஸ்தாக்கியார்நாடகம், சங்கிலியன் நாடகம் என்பனவாய் இவர் இயற்றியுள்ளநாடகங்களும், பல்வேறு பாக்களும் நாடகரசிகர்களுக்கும், பிறர்க்கும் நல்விருந்தாகிப் பெரும்பாராட்டுரைகள் பெற்றுள்ளன. ஆடம்பரவாழ்க்கையை அறியாதஇவர் தினமும் திவ்வியபூசைகண்டு, தினமும் தவருது செபமாலைசொல்லி வந்ததுடன் தாம் பெயர்பூண்ட அர்ச். சூசைமாமுனிவரில் அதிகப்பக்திவைத்து, "நன்மரணம் நின்தாசன் சூசைக்கருள்" என்னும் பஞ்சவிருத்தப்பாவை இயற்றி அவரது மலர்ப்பாதத்தில் சாற்றியிருந்தார்.

மறுநாட்சாயந்தரம் 5மணிக்கு இவரின் பிரேதசேமமானது நாலுவிடங்களிலுமிருந்து திரளான இனசனர் சிநேகிதர் வந்துகூடிய சமுகத்திலே கட்டளைக்குரவர் வண. எவ் றெஜுட் சுவாமியவர்கள் துக்கசங்கீதம்பாடிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாக நடந்தேறியது. இவருக்கு மூன்று புதல்வரும், ஒருபுதல்வியும் தற்போது சீவந்தராயுள்ளனர். மூத்த புதல்வர் எஸ். எம். வேதநாயகம் மலாயாவில் அரசினர் பகிரங்கவேலைப்பகுதி உத்தியோகஸ்தர். இரண்டாவது புதல்வர் பி. எஸ். அந்தோனிப்பிள்ளை, கொழும்பில் பிரபலவர்த்தக தாபனமொன்றில் பிரதமலிகிதர். மூன்ருவது புதல்வர் எஸ். பிரான்சீஸ், சிங்கப்பூர், அரசினர் துப்பறியும் கந்தோரில் மொழிபெயர்ப்பாளராய் உத்தியோகம்வகித்து வருபவர். இவரின் மருகன் என். சூசைப்பிள்ளை, மலாயா அரசினர் பகிரங்கவேலைப்பகுதி உத்தியோகஸ்தர். இவரை இழந்து துன்புறும் மனைவியார், புதல்வர், புதல்வி, மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் நாமும்அனுதாபப்படுகின்ரும்.

R. I. P.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை வைபவம்

## தலைமன்னார் பியர்

சென்ற 16-9-55 வெள்ளிவாரம் இம்மனுவேல் பாடசாலைமண்டபமும், முன்றிலும் பலவர்ணத்துவசங்களால் அலங்கரிக்கப்பட்டு ஓர் அழகியமாளிகையை ஒத்திருந்தது. மாலை 2.30 மணியளவில் நூற்றுக்குமேற்பட்ட மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் குழுமியிருக்க, பிரியாவிடை நாயகர் வண. ஏ. லெபோங்சுவாமியவர்களின் மோட்டர்சைக்கிள் பாடசாலை முன்றிலை யடைந்தது. அப்போது பிரியாவிடைநாயக சுவாமியவர்கள் மலர்மாலைசூட்டி இதற்கென அமைக்கப்பட்டிருந்த உயர் ஆசனத்திற்கு ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் அழைத்துச்செல்லப் பெற்றனர். தலைமன்னார்வைத்திய அதிகாரி திரு. ரி. செல்லத்துரை அவர்கள் பிரியாவிடைக்குத் தலைமைவகித்தார். பிரிவுபசாரப் பத்திரம் மாணவி பெ. காமாச்சியால் படித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் மாணவன்ஜோட்ச் பெனடிக்ற், தலைமை ஆசிரியர் எஸ். தேவதாஸ், வைத்திய அதிகாரி திரு. ரி. செல்லத்துரை ஆகியோருட்படப் பலர் பிரியாவிடைநாயகரின் அரும்பெருஞ் சேவைகளைப் பாராட்டிப்பேசினர். பின்னர்பாடசாலை மாணவர்களால் சுவாமிகளுக்கு அன்பளிப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் தேநீர்விருந்தும், நடனங்களும் தொடர்ந்துநடந்தன. அதன்மேல் பிரியாவிடைநாயகர் நன்றிகூறினார். ஈற்றில் ஆசிரியர் ஏ. ஆர். சிறில்அவர்களின் நன்றியுரையுடனும், சுவாமியவர்களின் திருக்காசியுடனும் பிரியாவிடை வைபவம் இனிதேமுடிவெய்தியது. கடைசியாகப் பிரியாவிடைநாயகரை நடுநாயகமாகக்கொண்டு ஆசிரியர்கள், மாணவர்களுட்படப் பலபுகைப் படங்கள் பிடிக்கப்பட்டன.

— நிருபர்

---

### நாரந்தாண்டியில் மரியாயின்சேனை

# வெளிக் கொண்டாட்டம்

சலாப கியூறியாக்கழகம் தனதுவருடாந்த வெளிக்கொண்டாட்டத்தை நாரந்தாண்டி, லூர்துமாதாதிருப்பதியில் இவ்வாண்டு நடத்தத்தீர்மானித்து நிகழும் புரட்டாதிமாதம் 11-ந்திகதி ஞாயிறன்று காலை 7-30 மணிப்பூசையோடு தொடக்கியது. பூசைவேளை வண. எல். ஏ. அகஸ்ரீன்சுவாமியவர்கள் சிறந்தஓர்பிரசங்கஞ் செய்தார். அதில்: பொதுவுடைமையானது சீனாவில் முதன்முதலாகக் கால்வைத்த போது மரியாயும், அவளின்சேனையும் தனது சத்துருக்களென அறிந்து அங்கிருந்த மரியாயின்சேனை அத்தியட்சகரான மேற்றிராணியாரைச் சிறைசெய்யப்பட்ட சேனையார்முன் சுட்டுக்கொலைசெய்ததென்றும், மரியாயின் சேனையைக் கூட்டமென அழையாது சேனையென்று அழைப்பதால் இதுரோமைச்சேனையின் வீரத்தையும், பிரமாணிக்கத்தையும்கொண்டு பாவத்தை எதிர்த்துச் சர்வேசுரனின் இராச்சியத்தைப் பரப்பப் போராடவேண்டுமென்றும், இச்சேனையின் பிரதானநோக்கம் சுயபரிசுத்தம், செபம், ஊழியமே யென்றும், இது பொறுமையுடன் கூடிய அன்பைஉள்ளிட்ட ஊழியம் எதையும் சாதிக்கவல்லதென்றும் குறிப்பிட்டார்.

பூசைமுடிவில் சேனையின் ஆரம்ப செபமும், செபமாலையும் சொல்லப்பட்டன. பின்னர் காலைச்சாப்பாடும், களியாட்டப் போட்டியொன்றும் இடம்பெற்றன. முடிவில் சங்கிலிச்செபமும், பகற்போசனமும் தொடர்ந்தன. பிற்பகல் 2 மணிக்குக் கதம்பக்கச்சேரி ஒன்று நிகழ்ந்தது. இப்போட்டியில் வெற்றியடைந்தோருக்குப் பரிசில்கள் வழங்கச் சனப்பிரதிநிதிசள்சபையின் சபாநாயகர் சேர் அல்பேட் எவ். பீரிஸ் அவர்கள் வரவழைக்கப்பட்டிருந்தார். அவர் தேவதாயின்பிள்ளைகளுள் ஒருவரானதாம் இக்கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதில் பெருமகிழ்வு அடைவதாகவும், பிரதிதினமும் 18 மணித்தியால சமூகசேவைசெய்யத் தமக்குச்சக்தியருளுபவ தேவதாயென்றும், அவ கேட்போருக்குத் தவறாது அனுகூலம்செய்வதைத் தமதுசொந்த அனுபவத்தில் அறிவதாகவும், நம்நாட்டிலே நிகழக்கூடிய வேதசம்பந்தமான இடுக்கண்களில்நின்று மீள மரியாயின் சேனைபோன்ற திடமான ஸ்தாபனங்கள் அத்தியாவசியம்என்றும், அதன் மூலம் நாம்பிறருக்கு இம்சைவிளைவிப்பதல்ல, ஆனால், நமது சொந்தஉரிமைகளைப் பாதுகாப்பதாக அமையும்என்றும், "தேவதாய் எல்லோரையும் ஆசீர்வதிப்பாராக" என்றும் அர்த்தபுஷ்டியமைந்த அரியதொரு சொற்பொழிவாற்றிப் பரிசில்கள்வழங்கினர்.

ஈற்றில் சற்பிரசாத ஆசீர்வாதம், இறுதிச்செபம், தேநீர் இவற்றோடு மாலை 4-45 மணியளவில் கொண்டாட்டம் முடிவெய்தியது.

— நிருபர்

---

### மட்டக்களப்பு

# தாண்டவன்வெளித் தபால்

அமலோற்பவமாதா பக்திச் சபைக்கன்னியரின் சுற்றுலா:— தாண்டவன்வெளி, பரிசுத்தவியாகுலமாதாகோயிற் பங்கைச்சேர்ந்த அமலோற்பவமாதா பக்திச்சபைக் கன்னியர்கள் கட்டளைக்குரவர் வண. ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக்சுவாமியவர்களின் தலைமையிலே கடந்தசனிக்கிழமைகாலை 8 மணியளவில் புறப்பட்டு வாழைச்சேனையை அடைந்தார்கள். அங்குஅவர்கள் பலஇடங்களைச் சுற்றிப்பார்த்து மதியம் 12 மணியளவில் அர்ச். தெரேசம்மாள்கோவில் முன்றிலில் போசனம்அருந்திப் பி. ப. 4 மணியளவில் பாமலர்களால் தேவதாய்க்கு நன்றிகூறி 6 மணியளவில் தம்இல்லம் வந்தடைந்தனர்.

பாத்திமாமாதா சிற்றாலயம் — எங்கள்பாத்திமாமாதாசிற்றாலயம் வாசகர்அனைவருக்கும் நினைவிலிருக்குமென எண்ணுகிறேன். இப்போது வெகுதுரிதமாக வேலைநடந்துகொண்டிருக்கிறது. வருகிறமாதம் 15-ந்திகதி மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவரால் இதுஆசீர்வதிக்கப்பட்டு, மாலை ஆராதனை வைபவங்கள் நடைபெற்று, மறுநாட்காலை திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இச்சிற்றாலயத்துக்கு வேண்டிய பாத்திமாஅன்னையினதும், மூன்றுபிள்ளைகளினதும் சுரூபங்கள் யாழ்ப்பாணம், ஜே. ஏ. லியோமேஸ்திரியரால் மிகஅழகாகச் செய்யப்பட்டுள்ளன. அவரின் கைத்திறமையை வண. கட்டளைக்குரவரும், பங்குக்கிறீஸ்தவர்களும் பாராட்டியிருக்கின்றார்கள்

பங்குக்கோவில் பாடகர்குழுவின் சுற்றுலா— இப்பங்குக்கோவில்பாடகர்குழுவினரின் அயராதசேவையை முன்னிட்டு வண. கட்டளைக்குரவரால் ஓர்சுற்றுலா ஒழுங்குபண்ணப்பட்டது. பாடகர்அனைவரும் சென்ற சனிக்கிழமைகாலை 8 மணியளவில் புறப்பட்டுக் கல்முனையை அடைந்தார்கள். அங்கு திரு. எஸ். எம். தியோப்பிலஸ், டி. ஆர். ஓ. அவர்களால் வரவேற்கப்பட்டுக் குளிர்பானம்பருகிச் சிலஇடங்களைச் சுற்றிப்பார்த்துப் பலநண்பர்களையும் கண்டு அளவளாவி மதியத்தின்போது திரு. பி. அலோஷியஸ் என்பவரின் மாஞ்சோலையில் போசனம்அருந்திப் பி. ப. 4 மணியளவில் வரவேற்பாளரால் அளிக்கப்பட்ட தோட்ட உபசாரணையிலே கலந்துகொண்டபின் புறப்பட்டு 7 மணியளவில் தங்கள் இல்லம் வந்தடைந்தனர்.

பரிசுத்தவியாகுலமாதா திருநாள் — சென்ற 15-ந்திகதி வியாழக்கிழமை பரிசுத்தவியாகுலமாதா திருநாள் இங்கே கொண்டாடப்பட்டது. அன்று காலை வண. கட்டளைக்குரவர் பாடற்பூசைநிறைவேற்றினர். பி. ப. 6-30 மணிக்கு வண. கட்டளைக்குரவர் ஜோர்ஜ் ஈ. எல். வம்பேக், வண. ரி. ஆறன்ஸ், வண. ஏ. ரி. டெல்மாமோர் சுவாமிகளால் வேஸ்பர்பாடித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. இக்கொண்டாட்டம் பரிசுத்த வியாகுலமாதா பக்திச்சபையார் பொறுப்பிலே நடைபெற்றது.

— நிருபர்

---

இந்தியாவிலே சபர்மதிப் படுக்கையிலிருந்து எவரும் மணல்எடுக்கப் படாதென்று அமிதபாத் நகரசபை கட்டளைபிறப்பித்திருக்கிறது. அதனால் ஐயாயிரம் மனிதருக்கும், பத்தாயிரம் கழுதைகளுக்கும் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படவிருக்கிறது. கழுதைகளின்சொந்தக்காரர் ஏலவே ஆட்சேபித்துக் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்களாம்.

---

### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

செட்டிகுளம்: ஜே. இராயப்பு 30-00 — கொஸ்லாண்ட்: எஸ். கே. மரியாம்பிள்ளை 10-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 5-00 — குருனாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 4-00 — கொச்சிக்கடை: ஜே. எம். கொறேறு 3-00 — கொழும்பு: மிஸ். ஏ. அந்தோனிப்பிள்ளை 3-00, கே. அந்திரேயாஸ் 6-00 — கொற்றமல்லி: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — மறிச்சுக்கட்டி: எஸ். றேசம்மா 3-00 — வின்டுல்லா: பி. எம். போல் 9-00 — கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 2-00 — பூக்குளம்: எஸ். ஏ. யுவக்கீனு 5-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00 — உடப்புசலாவை: ஏ. எஸ். பீற்றர் 3-00 — வட்டவளை: ரி. அன்ரனி குரூஸ் 6-00 — அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 5-00 — பரந்தன்: ரி. மரியாம்பிள்ளை 5-00 — டிம்போடிரு: பி. எவ். சூசைப்பிள்ளை 2-00 — இற்றுலை: எவ். எல். லியோ 10-00, மிசெஸ் பிரும் அன்ரன் 10-00 — வகோவற்றலாவ: எஸ். அன்ரனி 10-00 — மலாயா: எஸ். யோசேப் 13-25 — யாழ்ப்பாணம்: ஏ. பிரான்சிஸ்பிள்ளை 4-00 — நாவற்குளி: ரி. வில்லியம் 1-50 — பாஷையூர்: லேனு யோவான் 1-00, மிசெஸ் ஜே. ஞானப்பிரகாசம் 1-00 — காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — கற்பிட்டி: எஸ். பி. நோயீஸ் 10-50 — மஸ்கேலியா: டி. எஸ். பீற்றர் 5-00 — கேகாலை: ஏ. யுவக்கீம் 5-00 — பண்டாரவளை: மிசெஸ் ஜே. எஸ். பீற்றர் 3-00 — டினியாயா: தோமஸ்பிள்ளை 5-00 — பூனைப்பிட்டி: ரி. செபஸ்தியாம்பர்னாந்து 3-00 — முள்ளிக்குளம்: எம். சந்தியா சில்வா 1-00, கே. வலத்திசார் 1-00, ஏ. பி. இன்னாசியா கூஞ்ஞ 6-00 — உடப்பு: தோமஸ் எற்வேட் மிராவ் 2-00 — சில்லாலை: எம். ஜே. மரியநாயகம் 2-00 — ஆனைக்கோட்டை: எஸ். பூமணி 2-00 — வவுனியா: பி. ஜே. சிறில் 2-00 — கல்கமுவா: ஏ. மரியானுள் 25-00, பி. எலிசபேத் 2-00, வி. சந்தியாப்பிள்ளை 2-00, வி. எஸ். சூசைப்பிள்ளை 5-00, எஸ். செபஸ்தியாம்பிள்ளை 2-00.

| | |
|---|---|
| The Director,<br>St. Joseph's<br>Conference<br>Bishop's House<br>JAFFNA. | சென் வின்சென்ற் டி<br>போல்சபைத்தலைவர்<br>மேற்றிராசன<br>மாளிகை,<br>யாழ்ப்பாணம். |

---

இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி

### புகையிரதக்கடவைத் திருத்தங்கள்

றேசலை - கற்றன் புகையிரதநிலையங்களுக்கிடையிலுள்ள 107 மைல் 47சங்கிலியில் அமைக்கப்பட்டுள்ள புகையிரதக்கடவை 5-10-55 காலை 7மணி தொடக்கம் மறுநாட்காலை (6-10-55) 7மணி வரைக்கும் திருத்தப்படும்.

இக்கடவை 5-10-55 மாலை 9மணி 30 நிமிஷம் தொடக்கம் மறுநாட்காலை (6-10-55) 3மணி 30நிமிஷம் வரைக்கும் எல்லாவித போக்குவரத்து வாகனங்களுக்கும்முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

---


## FOR—SALE

Cane drawing room suit, cane verandah chairs, children's bed and cupboard; Burma Teak bed room furniture; Electrolux (Dual operated) Refrigerator—4½ cubic feet Guarntee in force.

Can be seen at 170, Main Street, Jaffna.

between 8 a.m. and 6 p.m.


---

## ORDER NISI

DECLARING WILL PROVED.

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the Last Will and Testament of the late Martyn James Rasiah of Jaffna. Deceased.

Testamentary Jurisdiction } No. 23

1. Dr. Lionel Joseph
2. Miss Blossom Joseph
3. Xavier Sellathambu, D.R.O. all of Jaffna Town

Petitioners.

Vs.

1. Mrs. Mary Thangaratnam Saverimuttu widow of S. G. Saverimuttu
2. Mrs. Jessie Sellathambu
3. Madathesu Muttiah
4. The Parish Priest, The Cathedral, Jaffna all of Jaffna Town

Respondents.

This matter coming on for disposal before P. Sri Skantha Rajah Esquire, District Judge, Jaffna on the 17th day of March 1955 in the presence of Mr. Vital A. Moses, Proctor on the part of the Petitioners and the affidavit on the abovenamed Petitioners dated the 9th day of January 1955 having been read.

It is ordered that the Last Will and Testament of the deceased Martyn James Rasiah dated the 27th day of February 1954 and numbered 1294 be and the same is hereby declared proved and that the 1st, 2nd and 3rd Petitioners are the executors named in the said Will and that they are entitled to have Probate of the same issued to them accordingly unless the Respondents or other interested shall on or before the 27th day of May 1955 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Drawn by,
Sgd. Vital A. Moses
Proctor for Petitioners.

This 25th day of April 1955.
Sgd. P. Sri Skantha Rajah,
D. J.

Extended for 24th June 1955
Intld. P. Sri Skantha Rajah,
D. J.

Extended for 19th August 1955
Intld. P. Sri Skantha Rajah,
D. J.

Extended for 9th September 1955
Intld. P. Sri Skantha Rajah,
D. J.

Extended for 23rd September 1955
Intld. P. Sri Skantha Rajah,
D. J.

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 22 1955.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org